REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 25 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்


1932 - 2022

வரு. 90 இல. 121 | Wednesday 25, May, 2022 | 12பக்கங்கள் | 40/-

எரிபொருள் விலையதிகரிப்பு:

## குறைந்த பட்ச பஸ் கட்டணம் ரூபா 32

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பஸ் கட்டணத்தை 19.5 வீதத்தால் அதிகரிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

05

நேற்று நள்ளிரவு முதல் அமுல்

## எரிபொருள் விலையை தீர்மானிக்க புதிதாக விலைச்சூத்திரம் அறிமுகம்

மாதம் இரு முறை அல்லது மாதாந்தம் விலை மறுசீரமைப்பு

**ஷம்ஸ் பாஹிம்**



எரிபொருள் விலையை தீர்மானிக்க விலைச்சூத்திரம் ஒன்றை அறிமுகம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருட்களுக்கான உள்ளூர் விலையைத் தீர்மானிப்பதற்காக வெளிப்படைத் தன்மையுடன் அனைத்து செலவினங்களின் கூறுகளைக் குறித்துக் காட்டும் வகையில் விஞ்ஞான ரீதியான பொறிமுறையொன்றின் அடிப்படையில் பெற்றோலியப் பொருட்களின் விலையைத்

05

புதிய அமைச்சர் நியமிக்கப்படும் வரை

## பதில் நிதியமைச்சராக ஜனாதிபதி செயற்படுவார்



**ஷம்ஸ் பாஹிம்**

புதிய நிதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படும் வரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ அந்த பொறுப்பை பதில் அமைச்சராக மேற்கொண்டுவருவதாகஇணைஅமைச்சரவைபேச்சாளர் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில்

05

## அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே அரச ஊழியர் அழைப்பு

புதிய சுற்றறிக்கையை வெளியிட்டது அரசாங்கம்

**ஷம்ஸ் பாஹிம்**



அரச ஊழியர்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அழைப்பது தொடர்பான சுற்றறிக்கை பொதுநிர்வாக அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தற்போதைய எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி நிலையில் பொது நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய அரச ஊழியர்களை அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதோடு

05

# 21 ஆவது திருத்தம் குறித்து கட்சித் தலைவர்களுடன் பேச்சு

இவ்வாரம் கலந்துரையாடி அடுத்த அமைச்சரவையில் மீள ஆராய்வு



பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் பேசி அவர்களது திருத்தங்கள் யோசனைகளையும் உள்வாங்கி, பின்னரே அமைச்சரவைக்கு இறுதியாக சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்த யோசனை தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்களுடனும் இவ்வாரம் கலந்துரையாடி அவர்களின் யோசனைகளையும் உள்வாங்கி அந்த யோசனை குறித்து அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர்,

அரசியல் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்காக 21ஆவது திருத்த யோசனையை நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்‌ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்தார். எமக்கும் திருத்தங்கள் வழங்கப்பட்டன. இந்த திருத்தங்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சித்தலைவர்களுக்கும் துரிதமாக வழங்கி கலந்துரையாடவும் தேவையான திருத்தங்கள்

05

## மருத்துவ நெருக்கடியை தவிர்க்க முதற்கட்டமாக உலக சுகாதார ஸ்தாபன உதவியின் கீழ் 2 மில்லியன் டொலர்



பிரதமருடனான சந்திப்பில் உலக வங்கி பிரதிநிதி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள மருந்துப்பொருட்கள் நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு உலக சுகாதார அமைப்பு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம்

05



கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு


## கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைக்க முன்வரவும்

03



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவையில் சுற்றாடல் அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹாபிஸ் நசீர் அஹமட் நேற்று பத்தரமுல்லையிலுள்ள அமைச்சில் தனது கடமைகளை கையொப்பமிட்டு உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டபோது எடுத்த படம்.
(படம்:கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

## இராணுவத்தின் கொவிட்-19 தடுப்பூசி நிலையம் மீண்டும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி வழங்கல் மையம் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் தடுப்பூசி செலுத்தப்பட்ட அதே இடத்தில் நேற்று முதல் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த ஏனைய

05

## வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்தில் கட்டுப்பாடு!

**ஷம்ஸ் பாஹிம்**

பஸ், லொறி, உழவு இயந்திரங்களுக்கு விதிவிலக்கு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, நேற்று (24) முதல் அமுலுக்கு

05

## பொருளாதார சவால்களை எதிர்கொள்ள ஐ.நா. உதவும்



அமைச்சர் பீரிஸிடம் வதிவிட பிரதிநிதி உறுதி

சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கும், அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும், வேலையின்மை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற பிரச்சினைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு

05

## எரிபொருள் விலைகள் மீண்டும் அதிகரிப்பு

பெற்றோல் ரூ.420; டீசல் ரூ.400 ஆனது

**ஷம்ஸ் பாஹிம்**



எரிபொருள் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், ஒக்டென் 92 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 420 ரூபாவாகவும், ஒக்டென் 95 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 450 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது. ஒட்டோ டீசல் லீட்டர் ஒன்றின் விற்பனை விலை 400 ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீட்டர் ஒன்றின் விற்பனை

05

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை:

## பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி வெளியானது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் 2021 ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகளுக்கமைய வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெட்டுப்புள்ளிகள் 2021 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்

05

மே.09 காலி முகத்திடல் வன்முறை சம்பவம்:

## ஜோன்ஸ்டன் எம்.பியிடம் 5 மணிநேரம் வாக்குமூலம் பதிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு காலிமுகத்திடலில் கடந்த மே 9ஆம் திகதி நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்துள்ளது.

நேற்றைய தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அவர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை 10 மணியளவில் அவர் அங்கு ஆஜரானதாகவும் அவரிடமிருந்து ஐந்து மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வும்

05

## மண்ணெண்ணெய்யை விநியோகிப்பதற்கு தனியான நிரப்பு நிலையம்

மண்ணெண்ணெய் மாத்திரம் விநியோகம் செய்வதற்கான நிரப்பு நிலையங்களை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதனூடாக, பெருந்தோட்ட தொழிலாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு இலகுவாக மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து தற்போது திட்டமிடப்பட்டு வருவதாகவும் எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டார்.



## எரிபொருள் இறக்குமதிக்காக இந்தியா 500 மில். டொலர் உதவி

குறுகிய கால கடனாக பெற அமைச்சரவை அங்கீகாரம்

03



## முச்சக்கர வண்டிகளின் கட்டணமும் அதிகரிப்பு

முதலாவது kmக்கு ரூ.100 ஆக நிர்ணயம்

03

### விக்கல் வீராச்சாமி



அண்ணே, உந்தப் பெரிய புலிகள ஜனாதிபதி அழிச்சதா சொல்லுறாங்க, ஆனா ஒண்டரை மாசமாகியும் கோல் பேசில நிக்கிற 100 பேர அகற்ற முடியாம நிக்குறார்....

தம்பி, அது வேற இது வேற, ஏற்கனவே ஒருத்தர் கிளறிவிட்டு நாடே எரிஞ்சது, இவர் தலைவரெல்லோ, அதால நாட்டைப் பற்றி சிந்திக்கிறார் போல கிடக்கு

அரசில் அமைச்சுப் பதவிகள் தேவையில்லை:

## முற்போக்கான அனைத்து திட்டங்களுக்கும் ஆதரவு

SLFPயின் மத்திய குழு தீர்மானம்



புதிய அரசாங்கம் முன்வைக்கும் முற்போக்கான திட்டங்களுக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இருப்பினும் தற்போதைய அரசாங்கத்தில் எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன

05

## 21 ஐ கொண்டு வரும் முயற்சி ஒரு ஏமாற்றும் வித்தையே

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள 21 ஆவது திருத்தத்திற்கு பதிலாக ஏமாற்றமிக்க மோசடியான திருத்தத்தை கொண்டு வர அரசாங்கம் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதும், 19 ஆவது திருத்தத்தை பலமிக்கதாக கொண்டு வந்து, 20 ஆவது திருத்தத்தை நீக்குவதும், அனைத்து ஜனநாயக வெற்றிகளை யும்

05

கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக

## நாட்டை விட்டு வெளியேற முயன்ற 67 பேர் கைது



கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாக இடம்பெயர முயன்ற 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருகோணமலை கடற்பகுதியில் சல்லி சம்பல்தீவு பகுதியில் கடற்படையினர் நேற்று முன்தினம் (23) இரவு

05

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## மியன்மார் கடலில் படகு மூழ்கி 17 அகதிகள் பலி



மியன்மார் கடற்பகுதியில் மோ ச மான காலநிலை காரணமாக ரொஹிங்கிய அகதிகள் படகு ஒன்று மூ ழ்கியதில் சிறுவர்கள் உட்பட குறைந்தது 17 பேர் உயிரிழந்துள்ளனர்.


வங்காள விரிகுடா வழியாக மலேஷியாவுக்கு செல்ல முயன்ற இந்தப் படகில் குறைந்தது 90 பேர் இருந்துள்ளனர். சில சடலங்கள் மேற்கு மாநிலமான ரகினே, கடற்கரைகளில் ஒதுங்கி இருப்பதோடு தொடர்ந்து 50க்கும் அதிகமானவர்கள் காணாமல்போயுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 12 பெண்கள் மற்றும் இரு சிறுவர்கள் இருப்பதாக ரொஹிங்கிய ஆர்வலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் இடம்பெற்ற கடுமையான இராணுவ நடவடிக்கையை அடுத்து முஸ்லிம் சிறுபான்மையினரான ரொஹிங்கியாக்களில் பெரும்பாலானவர்கள் அண்டை நாடான பங்களாதேஷுக்கு தப்பிச் சென்றபோதும் சிலர் தொடர்ந்து மியன்மாரிலேயே தங்கியுள்ளனர். கடந்த மே 19 ஆம் திகதி இந்தப் படகு புறப்பட்ட நிலையில் சில நாட்களில் அது மோசமான கால நிலையில் சிக்கியுள்ளது.

## குரங்கம்மையை கட்டுப்படுத்த சுகாதார அமைப்பு நம்பிக்கை

ஆபிரிக்காவுக்கு வெளியில் குரங்கம்மை நோயை கட்டுப்படுத்தலாம் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.



சொறி மற்றும் காய்ச்சலை ஏற்படுத்தக் கூடிய இந்த வைரஸ் ஐரோப்பா, அமெரிக்க பிராந்தியம் மற்றும் அவுஸ்திரேலியாவில் 100க்கும் அதிகமான சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதும், பரந்த அளவில் மக்களிடையே இதன் பாதிப்பு மிதமாகவே இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வைரஸ் மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவில் பொதுவாகக் காணமுடிகிறது. “இது ஒரு கட்டுப்படுத்த முடியுமான நிலைமை” என்று உலக சுகாதார அமைப்பின் வளர்ந்து வரும் நோய் பிரிவின் தலைவர் மரியா வான் கர்கோவ் கடந்த திங்கட்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த வைரஸ் தற்போது ஆபிரிக்காவுக்கு வெளியில் 16 நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 50 ஆண்டுகளில் ஆபிரிக்காவுக்கு வெளியே மிகப்பெரிய வெடிப்பு இருந்தபோதிலும், குரங்கம்மை மக்களிடையே எளிதில் பரவாது, மேலும் இந்த அச்சுறுத்தல் கொரோனா வைரஸ் தொற்றுநோயுடன் ஒப்பிட முடியாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த நோய் தோலில் இருந்து தோலுக்கான தொடர்பு மூலமே பரவுகிறது. அத்துடன் இந்த நோய்க்கான வைரஸ்கள் பிறழ்வதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் உலக சுகாதார அமைப்பின் முன்னணி நிபுணர் கேர்கோவ் குறிப்பிட்டுள்ளார்.

குரங்கம்மை எளிதில் பரவக்கூடியதல்ல. இதுவரை யாரும் கடுமையாகப் பாதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானில் கட்டடம் இடிந்து பலர் பலி



தென் மேற்கு ஈரானில் பூர்த்தி செய்யப்படாத கட்டடம் ஒன்று இடிந்ததில் பத்துப் பேர் பலியாகி இருப்பதோடு பல டஜன் பேர் காயமடைந்துள்ளனர்.

அபதான் நகரில் உள்ள இந்த 10 மாடி கட்டட இடிபாடுகளில் சிக்கிய பலரும் நேற்று இரவு முழுவதும் இடம்பெற்ற தேடுதல்களில் மீட்கப்பட்டுள்ளனர்.

கொங்கிறீட் தளங்கள் மற்றும் இருப்பு விட்டங்கள் தரையில் விழுந்து பல கார் வண்டிகள் நசுங்கி இருப்பதை படங்கள் காட்டுகின்றன. இந்த விபத்துக்கான காரணம் பற்றி விசாரணை நடத்தப்படுவதாக அதிகரிகள் தெரிவித்தனர்.

கட்டடத்தின் உரிமையாளர் மற்றும் ஒப்பந்ததாரர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.

## தாய்வான் கவலை



ஜெனிவாவில் நடைபெறும் உலக சுகாதார அமைப்பின் தீர்மானங்களை மேற்கொள்ளும் பிரிவான உலக சுகாதார சபையின் கூட்டத்திற்கு அழைக்கப்படாமை குறித்து தாய்வான் கவலை வெளியிட்டுள்ளது.

கொவிட்19 தொற்று ஆரம்பமான பின்னர் உலகளாவிய சுகாதார அதிகாரிகள் நேரில் கலந்து கொள்ளும் உலக சுகாதார சபையின் முதலாவது கூட்டம் தற்போது நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு அழைக்கப்படாமை குறித்தே தாய்வான் தம் கவலையைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை அமெரிக்கா, உலக சுகாதார சபையில் தாய்வானை சேர்ப்பதற்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

## அமெரிக்கா நெருப்புடன் விளையாடுகிறது : சீனா

தாய்வான் விவகாரத்தைப் பொறுத்தவரை சமரசத்துக்கே இடமில்லை என்று சீனா எச்சரித்துள்ளது.

தாய்வான் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டால், அமெரிக்க இராணுவம் தலையிடும் என்று ஜனாதிபதி ஜோ பைடன் கூறியிருந்த நிலையில், சீனா அவ்வாறு தெரிவித்துள்ளது.

தனது நாட்டின் நலனைத் தற்காக்கத் தயாராயிருப்பதாகக் கூறிய சீனா, தனது அரசுரிமையைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தது.

அமெரிக்கா நெருப்புடன் விளையாடுவதாகவும் தாய்வானைக் கொண்டு சீனாவைக் கட்டுப்படுத்த முயல்வதாகவும் அது குறிப்பிட்டது.



அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே ஏற்கனவே நிலைபெற்றுவிட்ட கொள்கைகளை மீறும் வகையிலான கருத்துகளையும் செயல்களையும் அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சீனா வலியுறுத்தியது.

## மலேஷியா கோழி ஏற்றுமதிக்கு தடை

மலேஷியாவில் கோழி இறைச்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் வரும் ஜூன் தொடக்கம் கோழி ஏற்றுமதியை நிறுத்துவதாக அந்த நாடு அறிவித்துள்ளது.

ஆசியாவில் மறுபுறம், இந்தியா கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்திருப்பதோடு, இந்தோனேசியா தனது பனை எண்ணெய்யின் வெளிநாட்டு விற்பனையை நிறுத்தியுள்ளது.

உக்ரைனின் மீது ரஷ்யா படையெடுத்ததைத் தொடர்ந்து உலகம் கடந்த பல தசாப்தங்களில் இல்லாத மோசமான உணவு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நேரத்திலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



மலேஷியாவில் கோழி இறைச்சியின் விலை அண்மைய மாதங்களில் அதிகரித்து வரும் நிலையில், வாடிக்கையாளர்கள் இறைச்சி வாங்குவதில் விற்பனையாளர்கள் கட்டுப்பாடுகளை கொண்டுவந்துள்ளனர்.

இந்நிலையில் உள்நாட்டு விலை மற்றும் உற்பத்தி ஸ்திரம் அடையும் வரை வெளிநாட்டு ஏற்றுமதியை நிறுவத்துவதாக மலேஷியா அறிவித்துள்ளது. மலேஷியா மாதாந்தம் 3.6 மில்லியன் கோழிகளை ஏற்றுமதி செய்கிறது.

கோதுமை மா விலை உயர்வு

## பெரிதும் பாதிக்கப்பட்ட சமூகமாக மலையக மக்கள்

**தலவாக்கலை குறூப் நிருபர்**


கோதுமை மா விலை உயர்வால் பெருந் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் பிரதான உணவாக காணப்படும் கோதுமை மாவின் விலை உயர்வானது மரம் ஏறி கீழே விழுந்தவனை மாடு மிதித்தது போல பெருந்தோட்ட மக்களின் நிலைமையாகி விட்டது என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த பல மாதங்களுக்கு முன் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் ஒரு கிலோ கோதுமை மா 80 ரூபாவிற்கு வழங்குவதாக மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளும் அரசாங்கமும் அறிவித்திருந்தது. அந்த மானிய விலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா கிடைப்பதில்லை. ஏற்கனவே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளம் முழுமையாக தோட்டத் தொழிலாளர்கள் பெறமுடியாமல் இழுப்பரியாக இருக்கும் இவ்வேளையில் கோதுமை மாவின்



விலை அதிகரிப்பால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இன்றும் இந்நாட்டிற்கு வெளிநாட்டு டொலர் நாணயத்தை பெற்றுக் கொடுப்பதில் வியர்வை சிந்தியும் குளவி கொட்டுக்கு இலக்காகியும் விசப்பாம்புகளிடமும் மிருகங்களிடமிருந்தும் தன்னை பாதுகாத்து முதுகெலும்பாக உழைக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பற்றி அரசாங்கமோ, அமைச்சர்களோ அல்லது முதலாளிமார் சம்மேளனமோ தோட்ட நிர்வாகங்களோ சிந்திப்பதில்லை.




## வாழ்வதற்கே மக்கள் அச்சம் கொள்ளும் நிலை இன்று உருவாகியுள்ளது

### பிரிடோ நிறுவனத்தின் செயற்றிட்ட இணைப்பாளர்

**ஹற்றன் விசேட நிருபர்**

வாழ்வதற்கே மக்கள் அச்சம் கொள்ளும் நிலை இன்று உருவாகியுள்ளது. கடைக்கு சாமான் வாங்கச் செல்வதற்கு பயந்து கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் அந்தளவுக்கு வாழ்வதற்கான பெரிய சவால் ஏற்பட்டு விட்டது. மலையகத்திலே இருக்கின்ற தாய்மார்கள் உழைத்ததன் விளைவாகவே இந்த நாடு இப்படியாவது இருக்கின்றது. வெளிநாட்டில் கோப்பை கழுவி பேச்சு வாங்கி உழைத்து அனுப்புகின்றார்களே அந்த டொலர்களை வைத்துக்கொண்டு' இங்கே பாராளுமன்றத்தையும் ஏனைய களியாட்ட விழாக்களையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என பிரிடோ நிறுவனத்தின் செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.கே.சந்திரசேகரன் தெரிவித்தார்.

மலையகப்பகுதியில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்து எமது நாட்டிற்கும் வீட்டிற்கும் தங்களது பிள்ளைகளின் கல்விக்காக பெருமை சேர்த்த தாய்மார்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று (22) ஆம் திகதி அக்கரப்பத்தனை மன்றாசி பகுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிலைமை மாறவேண்டும். இந்த நிலைமை மாறுவதற்கு என்ன செய்யவேண்டும். நாட்டை விடுங்கள் உலகத்தை விடுங்கள் எங்களது சமூகத்தில் நாம் என்ன செய்யவேண்டும் என்று பாருங்கள்.

இன்று அந்நிய செலவாணியை கொண்டுவருகின்ற துறைக்கு ஊக்கத்தை கொடுத்து மேலும் அந்நிய செலவாணியை கொண்டுவர தோன்றவில்லை. அப்படி தோன்றியிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

இந்த நாட்டிலே இருக்கின்ற இளைஞர்கள் பேசுகின்றார்கள் நாம் பேசவில்லை.

## தொழிலாளியை நிர்வாணமாக்கி தாக்கியவர்களுக்கு விளக்கமறியல்

மஸ்கெலியா நகரில் கூலித் தொழிலில் ஈடுபடும் நபர் ஒருவரை, ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி தாக்கியவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இத் தாக்குதலுக்கு இலக்கான மஸ்கெலியா சோளாங்கந்த தோட்டத்தைச் சேர்ந்த நபர், மஸ்கெலியா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார். மஸ்கெலியா நகரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வரும் சந்தேகநபர்கள். அவர்களின் வர்த்தக நிலையத்தில் கோதுமை மா இன்மையால், வேறொரு கடையிலிருந்து மா மூடை ஒன்றை கொள்வனவு செய்து வருமாறு தெரிவித்து, 5,720 ரூபாயை கூலித் தொழிலாளியிடம் இந்த மாதம் 14ஆம் திகதி வழங்கியுள்ளனர்.

எனினும் அந்த பணம் காணாமல் போனதாகவும் இதனால் சில நாட்களாக அக்கூலித் தொழிலாளி அந்த வர்த்தக நிலையத்துக்கு செல்வதை தவிர்த்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த வாரம் அந்த கூலித் தொழிலாளி மஸ்கெலியா நகருக்கு வருகைத் தந்த போது, வர்த்தக நிலைய உரிமையாளரும் மேலும் சிலரும் அந்த நபரை கடைக்குள் இழுத்துச் சென்று, ஆடைகளை களைந்து கடுமையாக தாக்கியதாக தாக்குதலுக்கு இலக்கானவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## கொங்கோடியா தோட்டத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொங்கோடியா கீழ் பிரிவு தோட்டத்தில் ஐஸ் போதைப் பொருளை தன்வசம் வைத்திருந்த நிலையில் இளைஞர் ஒருவரை இராகலை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள இளைஞர் வலப்பனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றுபவர் என தெரியவந்துள்ளதாகவும்,

அண்மையில் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் வலப்பனை பிரதேச செயலகத்தில் கடமையாற்ற உள்வாங்கப்பட்டவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக இராகலை பொலிசார் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த இளைஞர் ஐஸ் போதை பொருள் விற்பனையில் நீண்ட நாள் ஈடுபட்டு வந்ததாகவும் இவர் தொடர்பில் இராகலை பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து (23) மாலை இளைஞரை கைது செய்ததுடன் இவர் கைவசம் வைத்திருந்த ஆறு பக்கட் ஐஸ் போதை பொருளையும் கைப்பற்றியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பில் விசாரணைகளை நடத்திவருவதாக தெரிவித்த பொலிசார் இளைஞரை வெளப்பனை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

ஆ. ரமேஸ்

## வெளிநாடு சென்று உழைத்த தாய்மார்கள் கௌரவிப்பு



**ஹற்றன் விசேட நிருபர்**

மலையகப் பகுதியில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்து எமது நாட்டிற்கும் வீட்டிற்கும் தங்களது பிள்ளைகளின் கல்விக்காக பெருமை சேர்த்த தாய்மார்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று (22) ஆம் திகதி அக்கரப்பத்தனை மன்றாசி பகுதியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு சர்வதேச அன்னையர் தினத்தினையொட்டியே இடம்பெற்றது. இதன்போது வெளிநாட்டில் பணிபுரியும் பெண்கள் தங்களது குடும்பங்களுக்காக ஆற்றுகின்ற சேவையினையும் படுகின்ற துன்பங்களையும் இந்த நாட்டுக்கு அவர்கள் பெற்றுத்தரும் அந்நிய செலாவணி தொடர்பாகவும் பலராலும் எடுத்துக் கூறப்பட்டதுடன் எனினும் அவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்க நிதியுதவிகள் நிவாரணங்கள் சென்றடையாது இருப்பது தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டன.

எனவே இவர்கள் தங்கள் குடும்ப வளர்ச்சிக்கு பட்ட துன்பங்கள் துயரங்களுக்காக இவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு குறித்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

## தமிழ்நாடு அரசின் உதவி கரத்திற்கு நன்றி தெரிவிப்பு



**மாத்தளை சுழற்சி நிருபர்**

இலங்கை முகம் கொடுத்துள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிவாரண உதவிகளை நம் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ள இந்தியா தமிழ்நாடு அரசுக்கு தமது நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதாக இரத்தோட்டை பிரதேசசபை உறுப்பினர் எஸ். எரோஷன் தெரிவித்தார்.

இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இத்தருணத்தில் இந்திய அரசு தானாக முன்வந்து எமது நாட்டுக்கு கடன் உதவிகளையும் தமிழ்நாட்டிலிருந்து தேவையான பெருமளவு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது இது காலத்தின் தேவையாகும். இவ்வாறான நிலையில் இந்திய அரசு எமது நாட்டிற்கு நேசக்கரம் நீட்டி இருப்பதை முன்னிட்டு இந்திய அரசுக்கு, தமிழ்நாட்டு முதலமைச்சர் உட்பட இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 மே 25 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**
20 முதல் 25 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.34 |
| லுஹர் | 12.08 |
| அஸர் | 03.32 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.36 |

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் வைகாசி 11
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தமரண யோகம்
திதி: திதித்துவயம்

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | செலவு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | முயற்சி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு

# கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைக்க முன்வரவும்

### குறுகிய அரசியல் இலாபங்களை கைவிடவும் கோரல்



நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய இக்கட்டான சூழ்நிலையின் உண்மை யதார்த்தத்தை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன், நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் கொள்ளை ரீதியான தீர்மானங்களுக்கு குறுகிய அரசியல் லாபம் இன்றி கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ நேற்று (24) அரசாங்க நிதி பற்றிய குழுவில் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு முன்னர் எரிபொருளுக்கு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட போது இதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட எதிர்ப்புக்களைத் தொடர்ந்து அதனை செயற்படுத்த முடியாமல் போன நிலையில் இதனை இன்று அறிமுகப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் தற்போதைய பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மத்திய வங்கி, நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தார். இதன் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்த்து நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் இதற்கான பயணத் திட்டம் தொடர்பில் முழுமையான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா பரிந்துரைத்தார். இதனைப் பாராளுமன்றத்தில்

05

# எரிபொருள் இறக்குமதிக்காக இந்தியா 500 மில்.டொலர் உதவி

### குறுகிய கால கடனாக பெற அமைச்சரவை அங்கீகாரம்

(ஷம்ஸ் பாஹிம்)



இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பின் கீழ் பெற்றோலியப் பொருட்கள் கொள்வனவுக்காக மேலும் 500 மில்லியன் டொலர் குறுகியகால கடனை பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடி நிலைமையால் எமது நாட்டுக்குத் தேவையான எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்புடன் 500 மில்லியன் அமெரிக்க டொலர் குறுகியகாலக் கடன் வசதியும், இந்திய அரச வங்கியின் ஒத்துழைப்பின் கீழ், மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியும் கிடைத்துள்ளது. அதேபோல், தற்போது நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொண்டு தேவையான பெற்றோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பின் கீழ், மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க இந்திய அரசு உடன்பட்டுள்ளது. இந்த கடனை பெற்றுக்கொள்வதற்காக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அமைச்சரவை அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்

### ஜனாதிபதியினால் நேற்று கடிதங்கள் கையளிப்பு

அமைச்சரவை அமைச்சுக்களின் புதிய செயலாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினால் நேற்று கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

புதிய அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்களின் பெயர்ப் பட்டியல் பின்வருமாறு.

01. **ஆர்.டபிள்யூ.ஆர். பேமசிறி** - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
02. **எம்.எம்.பி.கே. மாயாதுன்னே** - பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
03. **கே.டி.எஸ் ருவன் சந்திர** - துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் சேவைகள் அமைச்சு
04. **எஸ்.டி. கொடிகார** - வணிகம், வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு
05. **திருமதி வசந்தா பெரேரா** - நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு
06. **எஸ். ஹெட்டியாராச்சி** - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
07. **எம்.என். ரணசிங்ஹ** - கல்வி அமைச்சு
08. **எம்.பி.டி.யு.கே மாபா** - பத்திரன மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சு
09. **திருமதி ஆர்.எம். ஐ. ரத்நாயக்க** - கடற்றொழில் அமைச்சு
10. **மொன்டி ரணதுங்க** - நீர் வழங்கல் அமைச்சு
11. **யு.டி.சி. ஜயலால்** - நீர்ப்பாசன அமைச்சு
12. **அனுராத விஜேகோன்** - விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
13. **வைத்தியர் அனில் ஜாசிங்ஹ** - சுற்றாடல் அமைச்சு
14. **அனுஷ பெல்பிட்ட** - வெகுஜன ஊடக அமைச்சு
15. **எம்.பி.ஆர். புஷ்பகுமார** - கமத்தொழில் அமைச்சு
16. **சோமரத்ன விதானபத்திரன** - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
17. **ஜெனரல் (ஓய்வு பெற்ற) தயா ரத்நாயக்க** - கைத்தொழில் அமைச்சு
18. **திருமதி அருணி விஜேவர்தன** - வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
19. **பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி** - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
20. **திருமதி ஆர்.எம்.சி.எம். ஹேரத்** - வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சு
21. **எஸ்.ஜே.எஸ். சந்திரகுப்த** - சுகாதார அமைச்சு
22. **பி.எச்.சீ. ரத்நாயக்க** - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
23. **ஆர்.பி.ஏ. விமலவீர** - தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# பொருளாதார நெருக்கடியை தீர்க்க கட்சிசார் அரசியலை கைவிட வேண்டும்

### கடமையேற்பு நிகழ்வில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர்

(அஷ்ரப் சமத்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினையை தீர்க்க முதலில் கட்சிசார் அரசியல் மனநிலையை கைவிட வேண்டுமென சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். அமைச்சுக்கடமைகளை பாரமெடுக்கும் நிகழ்வில் நேற்று (24) உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய அவர்,

நாட்டில் ஏற்பட்டுள்ளது அரசியல் பிரச்சினையல்ல. பொருளாதாரப் பிரச்சினையே. இது, எல்லோரையும் பாதிக்கும் பிரச்சினை. எனவே, சகலரதும் ஒத்துழைப்பு இந்த நெருக்கடியை தீர்ப்பதற்கு தேவைப்படுகிறது. இப்பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு இந்த அரசாங்கம்தான் காரணமென்பதுமில்லை. கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகள் மற்றும் இயற்கை நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ளவை தான் இவை. ஈஸ்டர்தாக்குதல், அதன் பின்னரான கொரோனா தொற்றுக்களால் தொடர்ந்து நமது நாடு முடங்க நேரிட்டது.



இந்தக்காலங்களில் சுற்றுலாத்துறை வீழ்ந்தது. வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பப்படுவதும் வெகுவாகக் குறைந்தது. உள்நாட்டு உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதிச்செலாவணி வருமானத்தை பாதித்தது. இவைகள்தான், இந்த நிதி நெருக்கடியை ஏற்படுத்தின.

இதுபற்றி முறையாகச் சிந்தித்தால் மூன்று மாதங்களில் எரிபொருள் பிரச்சினையை தீர்க்கலாம். நான், சவூதி அரேபியாவிலுள்ள பெற்றோலியம் கனியவள பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றவன். என்னுடன் கல்விகற்றவரே இன்று சவூதிஅரேபியாவில் எரிபொருள் அமைச்சராக உள்ளார். எனவே,இது குறித்த எனது நிபுணத்திவத்தை பகிர்ந்துகொண்டு இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்கப்படும். முதலமைச்சராக இருந்த காலத்தில்கூட, இவ்வாறான பல சவால்களை வெற்றிகொள்ள முடிந்திருக்கிறது.

ஊழல், இலஞ்சம் என்பன எனது அரசியலில் இல்லை. எனது அரசியல் எதிரிகளால்கூட இதை நிரூபிக்க முடியாது. தற்போதைய சூழ்நிலையால், அரசியலிலும் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. கட்சிகளுக்கு அப்பால்சென்றுதான் இப்பிரச்சினைகளத் தீர்க்க முடியும். இதனால் தான், முஸ்லிம் காங்கிரஸில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குகிறேன். இந்த ஜனாதிபதி, மற்றும் பிரதமர் ஆகியோர் என்னில் நம்பிக்கை வைத்தே இந்த அமைச்சுப்பதவியை வழங்கி உள்ளனர். இதற்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறேன் எனவும் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அவசியம் யுத்தகாலத்திலே உணரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான காதர்மஸ்தான், அலிசப்ரி ரஹீம், முஷர்ரஹ்ப் மற்றும் அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் நிலையங்களுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு

### ரோந்து பணிகள் ஊடாகவும் கண்காணிப்பு



நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 24 மணித்தியால பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விசேட ரோந்து பணிகள் ஊடாக கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில்,

சில பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் திட்டமிட்ட வகையில் பொதுமக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகவும் அநாவசிய குழப்பங்களை ஏற்படுத்துவதற்காகவே இவர்கள் செயற்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதன்படி, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்கும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு, இந்த இடங்களில் பொதுமக்களுக்கு இடையூறாக நடந்து கொள்ளும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்த அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மோதல் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் உடனடியாக

05



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ நேற்று சி.ஐ.டியில் ஆஜராகியிருந்த நிலையில் அங்கு கூடிய பொதுமக்கள் சிலர் அவரை கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடத்துவதை காணலாம். (படம்: கயான் புஷ்பிக்க)

# எம்.பிக்களின் வீடுகளில் இருந்த இரசாயன உரம் குறித்து விசாரணை

### அதிகாரிகளுக்கு அமைச்சர் அமரவீர பணிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அண்மையில் ஏற்பட்ட வன்முறைகளின் தீவைக்கப்பட்ட எம்பிகளின் வீடுகளில் காணப்பட்ட இரசாயன உரங்கள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு விவசாய, வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தேசிய உர செயலகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறிப்பாக இந்த இரசாயன உரங்கள் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டதா அல்லது தனியார் வர்த்தகர்களிடம் இருந்து தற்போதைய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டதா அல்லது உர செயலகத்தினால் முன்னர் வழங்கப்பட்ட உரங்கள் பயன்படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் தெளிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் கோரினார்.

சில அரசியல்வாதிகளின் வீடுகளில் பெருமளவிலான யூரியா உரம் காணப்படுவதாக ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போதே அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

05

# முச்சக்கர வண்டிகளின் கட்டணமும் அதிகரிப்பு

### முதலாவது kmக்கு ரூ.100 ஆக நிர்ணயம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பெற்றோல் விலையேற்றத்தை தொடர்ந்து, முச்சக்கரவண்டி கட்டணங்களை அதிகரிப்பதற்கு அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, முதலாவது கிலோமீற்றருக்கான கட்டணமாக 100 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, பயணிக்கும் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 80 ரூபா விதம் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



# நிதியியல், சட்ட ஆலோசகர் சேவையை பெற அரசாங்கம் தீர்மானம்

இலங்கை அரசின் வெளிநாட்டு படுகடன்களை மீள்கட்டமைப்பதற்காக சர்வதேச நிதியியல் ஆலோசகர் மற்றும் சர்வதேச சட்ட ஆலோசகர் சேவையைபெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை அரசின் வெளிநாட்டு படுகடன்களை மீள்கட்டமைப்பதற்காக சர்வதேச நிதியியல் மதியுரைஞர் சேவை மற்றும் சர்வதேச சட்ட மதியுரைஞர் சேவைக்கான பெறுகைக் கோரலுக்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக கோரப்பட்ட விலைமனுக்களுக்கமைய, நிதியியல் மதியுரைஞர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 28 முன்மொழிவுகளும், சட்ட மதியுரைஞர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 23 முன்மொழிவுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கமைய, குறித்த இரண்டு பெறுகைகளுக்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் கீழ்க்காணும் வகையில் குறித்த பெறுகைகளை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச நிதியியல் மதியுரைஞர் சேவைக்கான

05

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 251.46 | 267.85 |
| கனடியன் டொலர் | 279.08 | 291.91 |
| யூரோ | 385.89 | 401.40 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 448.89 | 468.16 |
| சுவிஸ் பிராங்க் | 365.24 | 379.01 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.83 |
| குவைத் டினார் | 1,188.53 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 23

## குறள் தரும் சிந்தனை



மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து

தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக் கொண்டு போவது போல, விடாமுயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு வெற்றி கிட்டும்.

## கொவிட் தொற்று தணிந்து செல்கையில் உலகில் உருவான மற்றொரு அச்சுறுத்தல்!

உலகின் பல நாடுகளிலும் 'குரங்கு அம்மை' என்ற வைரஸ் நோய் பரவி வருகின்றது. இதன் விளைவாக உலகளாவிய ரீதியில் இந்நோய் ஒரு பேசுபொருளாக மாறியுள்ளது. அதேநேரம் இந்நோய் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

2019 இன் இறுதிப் பகுதியில் சீனாவின், வூஹான் நகரில் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று குறுகிய காலப்பகுதியில் உலகம் முழுவதும் பரவி பெரும் அசசுறுத்தலாகியது. இந்த அச்சுறுத்தலை முறியடிக்கக் கூடிய தடுப்பூசி 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அவசரத் தேவையின் நிமித்தம் பயன்பாட்டுக்கு வந்தது. அதன் ஊடாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கை ஏற்பட ஆரம்பமானது.

இந்நிலையில் கொவிட் 19 தொற்றின் தாக்கமும் பரவும் அச்சுறுத்தலும் பலவீனமடைந்து வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளன. அதன் பயனாக உலகெங்கிலும் மக்களும் இயல்பு நிலைக்கு திரும்பத் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான சூழலில்தான் இந்த குரங்கு அம்மை நோய் பரவும் அச்சுறுத்தல் தலைதூக்கியுள்ளது. கொவிட் 19 தொற்று பரவும் அச்சுறுத்தல் பெரு வீழ்ச்சியை அடைந்து ஒரு சில மாதங்கள் கூட கடப்பதற்குள் இந்நோய் பரவும் நிலையை அடைந்திருப்பது மக்களை மிகவும் அச்சம் கொள்ளச் செய்துள்ளது.

குரங்கு அம்மையானது, கொவிட் 19 தொற்றைப் போன்று ஒரு வைரஸ் நோயாகும். இதுவும் ஒரு தொற்று நோயாகவே விளங்குகின்றது. மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பொதுவாகக் காணப்படும் இவ்வைரஸானது, 1958 இல் முதன் முறையாகக் குரங்குகளிடம் தான் அடையாளம் காணப்பட்டது. ஆனால் 1970 இல் கொங்கோ நாட்டில் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளான முதலாவது மனிதர் அடையாளம் காணப்பட்டார். இதன் ஊடாக குரங்குகளிடம் காணப்படக் கூடிய இவ்வைரஸ் மனிதனுக்கு தொற்றியுள்ளது என்பது தெளிவாகின்றது.

2017 முதல் கொங்கோ, நைஜீரியா போன்ற நாடுகளில் பரவத் தொடங்கிய இந்நோய், தற்போது ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இஸ்ரேல், பிரித்தானியா, ஜேர்மனி உள்ளிட்ட 16 நாடுகளுக்கு நேற்று வரையும் பரவியுள்ளது. இற்றைவரையும் இந்நோய்க்கு உள்ளானவர்களாக 80 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இந்நோய் எவ்வாறு பரவுகின்றது? அதற்கான அறிகுறிகள், சிகிச்சைகள் யாவை? இந்நோயைத் தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் எவை? இவ்வாறான பரவலான அவதானம் உலகெங்கிலும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த வைரஸானது, இந்நோய்க்கு உள்ளாகி இருப்பவர் அல்லது விலங்குகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பவர் ஊடாகவே சுகதேகிகளுக்கு தொற்றுவதாக நம்பப்படுகிறது. அதே நேரம் எலி, அணில் போன்ற கொறித்து உண்ணும் விலங்குகள் ஊடாகவும் இவ்வைரஸ் பரவுவதாகக் கருதப்படுகின்றது. மனிதனுக்கு மனிதன் இவ்வைரஸ் பரவுவது எச்சில், சளித்துகள்கள் மூலமெனவும் நம்பப்படுகிறநது.

விலங்குகளில் இருந்து மனிதனுக்கு பரவும் பிரதான வழியாக அவை கடிப்பது கருதப்பட்டாலும் அவற்றின் உடல் திரவங்கள், சுவாச நீர்த்துளிகள், வைரஸ் கலந்த பொருட்கள் மற்றும் கண், மூக்கு, வாய் என்பவற்றின் ஊடாகவும் இவ்வைரஸ் உடலினுள் பிரவேசிக்க முடியும்.

இவ்வாறு 'இவ்வைரஸ் தொற்றுக்குள்ளாகும் ஒருவருக்கு காய்ச்சல், தலைவலி, உடல் வலி, வீக்கம், முதுகுவலி என்பன ஆரம்ப கட்ட அறிகுறிகளாக வெளிப்படும். இந்நோய்க்கான காய்ச்சல் ஏற்பட்டு மூன்று நாட்களாகும் போது ஆரம்பமாகும் அரிப்பு, கைகள், உள்ளங்கால்கள் வரை பரவ முடியும். உடலில் கொப்புளங்களும் ஏற்படும். எனினும் இந்நோயின் தாக்கம் 2 முதல் 4 வாரங்கள் வரை நீடிப்பதோடு அதன் பின்னர் தானாகவே குணமடைந்து விடும் என்று மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நோயைக் குணப்படுத்த விஷேட சிகிச்சை முறைகள் புழக்கத்திற்கு வந்திராத போதிலும், புதிய தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இந்நிலையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிப்பு சக்தி மற்றும் மூலக்கூற்று அறிவியல் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவேந்திர, 'உலகின் பல நாடுகளிலும் பரவியுள்ள குரங்கு அம்மை குறித்த பரிசோதனைகளையும் நோய்த்தொற்றைக் கண்டறிவதற்கான வசதிகளும் எமது பல்கழலைக்கழகத்தில் உள்ளன' என்றுள்ளார்.


உலகம் ஒரு பூகோளக் கிராமமாகச் சுருங்கியுள்ளதால் இந்நாட்டினரும் உலகின் பல நாடுகளுக்கும் சென்று வரக்கூடியவர்களாக உள்ளனர். அத்தோடு விலங்குகளுடன் நெருங்கி பழகக்கூடியவர்களும் இங்கும் இருக்கவே செய்கின்றனர். அதனால் உலகின் பல நாடுகளிலும் பரவியுள்ள இந்நோய்த் தொற்றைத் தவிர்ந்துக் கொள்வது தொடர்பில் விழிப்புணர்வுடனும் முன்னவதானதுடனும் செயற்படுவது மிகவும் அவசியம். அது ஆரோக்கிய வாழ்வுக்கு இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# படகில் வெளிநாட்டுக்கு செல்ல முயற்சிப்பது மரணத்தின் மீதான பயணத்துக்கு ஒப்பானது!

எந்தவொரு பிரஜையும் தான் குடியுரிமை பெற்ற நாட்டின் சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டும். அதனால் இலங்கைப் பிரஜைகளும் அரசியலமைப்பு சட்டவிதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதை முதலில் ஞாபகப்படுத்த வேண்டும்.

எமக்கு இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டத்திற்கு அமைய குடியேற்றம் தொடர்பான விஷேட சட்ட கட்டமைப்பு உண்டு. அதன் காரணமாக அந்த சட்டக் கட்டமைப்புக்கு உட்படாத எந்தவொரு குடியேற்றமும் அங்கீகரிக்கப் படாத சட்டவிரோதமான குடியேற்றம் என்றே கருதலாம். இலங்கைத் தீவு என்ற ரீதியில் அதற்கான இலகுவான வெளிப்பாடு காணப்படுகின்றது. அதன் காரணமாக சட்டவிரோதமாக குடிவரவு, குடியகல்வை அடிப்படையாகக் கொண்ட வியாபார அமைப்பு ஒரு சிலரால் உருவாக்கப்பட்டு அதன் மூலம் சூட்சுமமாக இலாபம் பெறுவதற்கு முயன்று வருவதை கவலையுடன் குறிப்பிட்டாக வேண்டும்.



இலங்கை கடற்படை ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத குடியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றி வருவதோடு, சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. இவ்வருடம் இதுவரை சட்டவிரோதமாக இந்நாட்டிலிருந்து குடியேற முயற்சி செய்த 211 நபர்களை சட்டத்தின் பிடியில் சிக்க வைப்பதில் கடற்படையினர் வெற்றி கண்டுள்ளனர்.

மன்னார் பிரதேசத்தில் 74 பேர், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 17 பேர், புத்தளம் பிரதேசத்தில் 13 பேர், மட்டக்களப்பு பிரதேசத்தில் 40 பேர் மற்றும் திருகோணமலை பிரதேசத்தில் 67 பேர் என இவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ளார்கள். கற்பிட்டி பிரதேசத்தில் 2021 மே முதலாம் திகதி வெளியேறி அவுஸ்திரேலியாவுக்கு கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக குடியேற முயற்சி செய்த 12 பேர் அவுஸ்திரேலிய எல்லைப் படை அணியினரால்(Australian Border Force) கிறிஸ்மஸ் தீவிலிருந்து 2022 மே மாதம் 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அத்துடன் இவ்வருடத்தில் இந்தியாவிற்கு சட்டவிரோதமாக குடியேற முயற்சி செய்த 86 இலங்கையர்களை இந்தியா கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



## வாழ்க்கையை ஆபத்துக்குள் தள்ளி விட வேண்டாம்!

அண்மையில் சட்டவிரோதமாக குடியேறுவதற்கு முயற்சி செய்த சிலர் மட்டக்களப்பு கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட போது அவர்கள் சென்ற மீன்பிடி இழுவைப் படகு கடலில் மூழ்கியதோடு உடைந்த படகில் சட்டவிரோதமாக குடியேறுவதற்கு சென்ற நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதனால் அவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட இந்த நபர்கள் இந்த வியாபாரம் தொடர்பாக நேரடியாக தொடர்புபட்டவர்கள் ஆவர். இந்த வியாபாரத்தை திட்டமிட்டு அப்பாவி மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் நபர்களாவர்.





கடலலையின் அதிகரித்த வேகம் காரணமாக உடைந்த மற்றும் பாதுகாப்பற்ற மீன்பிடி இழுவைப் படகுகள் மூலம் சட்டவிரோதமாக குடியேற முயற்சி செய்வது மிகவும் ஆபத்து மிக்க செயலாகும். அறியாமை காரணமாக இந்த வியாபாரிகளின் சூட்சுமம் மற்றும் தந்திரங்களுக்கு சிக்கி தங்களது வாழ்க்கையை ஆபத்துக்குள் தள்ளுவது தொடர்பாக இலங்கை பிரஜைகள் மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டும். அத்துடன் பாதுகாப்பற்ற சிறிய படகுகள் மூலம் நாள்,வார,மாத கணக்கில் அடிக்கடி மாறும் காலநிலையில் கடலில் பயணம் செய்வது மரணத்தில் நடக்கும் ஆபத்தான பயணமாகும்.

இவ்வாறு ஆழ்கடலில் சிக்கிய பல படகுகள் கடற்படையினரால் பல தடவைகள் மீட்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் வேறு நாடுகளுக்கு அருகில் சென்றாலும் அரச அனுமதி இன்றி நாட்டில் வாழ்ந்தாலும் சட்டவிரோத குடிவரவின் கீழ் அந்த நபர்களை கைது செய்வதற்கு அந்த அரசாங்கத்துக்கு சட்ட அதிகாரம் உண்டு. அதற்கு சரியான உதாரணமாக அவுஸ்திரேலிய கடல் மூலம் குடியேறுவதற்கு முயற்சி செய்த 12 நபர்களை அவுஸ்திரேலிய அதிகாரிகள் கைது செய்து மீண்டும் நாடு கடத்திய சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக கடும் தீவிரத்துடன் இலங்கைக் கடற்படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார் கள்.சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளுக்கு முயற்சி செய்து கைது செய்யப்படுவதால் தங்களுடைய உயிர் மற்றும் உடைமைகளை இழப்பதா என்பது குறித்து மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்திக்காமல் ஆபத்தில் விழுவது சிறந்த எதிர்காலம் பற்றி கொண்டிருந்த எதிர்பார்ப்பாகும். குறுகிய மற்றும் இலாபத்தை நோக்காகக் கொண்டு அடிமையாகி தொ லைநோக்கின்றி புத்திசாலித்தனமற்று முட்டாள்தனமாக செயல்படுவது நாட்டிலுள்ள குடியேற்ற சட்டத்தை மீறி நாட்டிலிருந்து குடியேறுவதற்கு முயற்சி செய்வது ஒருபோதும் வெற்றியளிக்க மாட்டாது என்பதை பொதுமக்களுக்கு வலியுறுத்துகின்றோம்.

**இலங்கை கடற்படை ஊடகப் பிரிவு**
–(தமிழில்: வீ.ஆர்.வயலட்)

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிவகைகள் எவை?

*"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்"*
– ஔவையார்
கி பி 2 ஆம் நூற்றாண்டுப் புலவர்

தக்காளிப் பழத்தின் விலை எட்டாத உயரத்துக்கு அதிகரித்துள்ளது. ஏனைய சகல மரக்கறிகளின் விலைகளும் முன்னெப்போதும் இல்லாதவாறு மூன்று இலக்கத்துக்கு அதிகரித்துள்ளன. இந்த விலை அதிகரிப்புக்கும் நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிக்கும் உரிய காரணங்களை ஆராய்ந்து இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி நாடு தன்னிறைவு காண்பதற்கு நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்வது முக்கியம். 50 வருடங்களுக்கு முன்னர் இருந்த எனது கிராமத்தின் அப்போதைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.



## ஔவையார் கூறியதையே அமுதவாக்காகக் கொள்வோம்!

அதிகாலையில் எழுந்து துலா மிதித்து, சூரிய உதயத்துக்கு முன்னரே தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி, கடின உழைப்பினால் 'வரப்புயர' வாழ்ந்த சுறுசுறுப்பான ஆண்கள். வீடுகளில் சமைக்கும் நேரம் போக ஏனைய நேரங்களில் பனையோலைக் கைத்தொழில், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு என்று வருமானத்தைப் பெருக்கி சுறுசுறுப்பான பெண்களுடன் உணவில் தன்னிறைவு கண்ட குடும்பங்கள்.

இன்றைய நிலை என்ன?

வெளிநாட்டு வருமானத்தில் தங்கியிருக்கும் சோம்பேறிக் குடும்பங்கள். குடித்தொகை அதிகரித்தாலும் பெரும்பாலான நிலங்கள் தரிசு நிலங்களாக பயிரிடாமல் இருக்கின்றன. பெண்கள் சமைக்காமல் வாங்கிச் சாப்பிடும் குடும்பங்களுடன், வருவாயை பெருக்கும் தொழில்களில் ஈடுபடாமல் தொலைக் காட்சி நாடகங்களை பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். மீதி நேரத்துக்கு தொலைபேசியிலும் சமூக வலைத்தளங்களிலும் அரட்டை அடித்துக் கொண்டு பெருமளவு பணத்தை இந்த வசதிகளுக்கு வாரி இறைத்துக் கொண்டிருக்கின்றனர். உள்நாட்டு யுத்த காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார உணவுத் தடைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இருந்தது. வீட்டுத்தோட்டங்களும் மரவள்ளி முதலான பயிர்ச் செய்கையும் ஊக்கப்படுத்தப்பட்டு இருந்தன. உணவு, எரிபொருள், மருந்து தடைகளை வெற்றிகரமாக அப்போதைய தமிழ் மக்கள் எதிர்கொண்டார்கள். முழுமையான மின்சாரத் தடைக் காலத்தில் எனது சக மாணவர்கள் வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த தெருவோர மின்விளக்குகளில் படித்து பிற்காலத்தில் மருத்துவ நிபுணர்கள் ஆனார்கள். ஆனால் இன்றைய தலைமுறை வெளிநாட்டு வருமானத்தில் சொகுசாக வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டது. 'வரப்புயர' என்று விவசாயத்திலும் ஏனைய சிறு தொழில்களிலும் ஈடுபடுவது கௌரவக் குறைவாக உள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் எளிதாக வீட்டுத் தோட்டங்களில் பயிரிடக் கூடிய தக்காளி போன்ற மரக்கறிகளை மறந்து போய் விட்டதால் அவற்றின் விலை அதிகரித்து இருக்கிறது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் 'வரப்புயர' உணவில் தன்னிறைவு காணும் எண்ணமும் முயற்சியும் வர வேண்டும். அவ்வாறான மாற்றம் வீடுகள் தோறும் ஏற்படும் போது மாத்திரமே ஔவையார் கூறிய நாடு தன்னிறைவு காணும் நிலை ஏற்படும்.

மறுபுறம் வரலாற்றில் இருந்து ஆட்சியாளர்களும் அரசாங்கமும் கற்க வேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன. இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜப்பான் தற்போதைய இலங்கையை விட மோசமான பணவீக்கத்தினாலும் சரிவடைந்த பொருளாதாரத்தினாலும் பாதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் வெகுவிரைவிலேயே அது அமெரிக்கா பிரித்தானியா ஆகிய நாடுகளை விட விரைவாக பொருளாதாரத்தில் முன்னேறியது.

ஜப்பான் விரைவாக முன்னேறியதற்கு பொருளாதார ஆய்வாளர்கள் இரண்டு முக்கிய காரணங்களை தெரிவிக்கின்றனர்.

1. போருக்காகப் பயன்படுத்திய வளங்களை நிறுத்திவிட்டு நாட்டின் அபிவிருத்திக்காக திசை திருப்பினார்கள்

2. அமெரிக்க நிதிஉதவி உட்பட வெளிநாட்டு உதவிகளில் தங்கி இருக்காமல் உள்ளூர் வளங்களின் மூலமாக நாட்டை மேம்படுத்தினார்கள். ஆனால் இலங்கையை எடுத்து நோக்கினால் இதற்கு நேர் மாறான கொள்கைகளை வகுத்து செயல்பட்டிருந்தார்கள்.

**– டொக்டர்
முரளி வல்லிபுரநாதன்**

## கட்சி பேதங்களை மறந்து... 03ஆம் பக்கத் தொடர்

சமர்ப்பித்து உரிய ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து விளக்கமளித்த மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிடுகையில், உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் கொள்கைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 600 மில்லியன் அமெரிக்க டொலரை எதிர்காலத்தில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்றார்.

அதேநேரம், எங்கிருந்தாவது டொலர்களைப் பெற்றுக் கொடுத்தாலும் மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லிட்ரோ காஸ் போன்ற நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள அதிக நஷ்டம் காரணமாக டொலர்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதிய இலங்கை ரூபாய்கள் இல்லாமை பாரிய பிரச்சினையாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், முதல் சுற்றில் தொழில்நுட்பப் பிரிவின் பேச்சுவார்த்தைகளின் இறுதிநாள் நேற்று (24) எனவும் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்து, கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடிய 34 மாத காலப்பகுதி சவால் மிக்கதாக அமையும் என்றும், இதனை எதிர்கொள்ள முடிந்தளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அண்மைக்காலத்தில் வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிக்கும் போது மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானம் உண்மை நிலைமைக்கு அப்பால் நடைமுறைச்சாத்தியம் அற்ற வகையில் குறிப்பிடப்படுவதால் பாராளுமன்றம் பிழையாக வழிநடத்தப்படுவதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டினார். இவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அமைச்சுக்கள் உள்ளிட்ட செலவீனங்களுக்காக அதிக தொகை ஒதுக்கப்படுவது இறுதியில் செலவீனத்தை ஈடு செய்ய முடியாத அளவுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை ஏற்படுவதும், கடன் சுமைக்குள் சிக்குவதும் இந்த நிலைமைக்குக் காரணம் என்றார்.

அதேநேரம், வருமான வரியை உரிய முறையில் வசூலித்தல், இரத்தினக்கல் கைத்தொழில் உட்பட ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் போது இடம்பெறும் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கு நாட்டில் உரிய பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட தொகையைவிட மேலதிகமாக ஒரு ட்ரில்லியன் ரூபா வரை கடனைப் பெறுவது தொடர்பான தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் இக்குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் விதுர விக்ரமநாயக, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், நாளக கொடஹேவா, ரஞ்சித் பண்டார, அனுப பஸ்குவல், சுரேன் ராகவன் ஆகியோரும், மத்திய வங்கியின் ஆளுநர் (கலாநிதி) நந்தலால் வீரசிங்ஹ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## எரிபொருள் விலையை தீர்மானிக்க...

தீர்மானிக்கும் வகையிலான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறான பொறிமுறையின் மூலம் பாவனையாளர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுடன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகளுக்கும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

அதேபோல் முக்கிய ஆறு (06) செலவினக் கூறுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தி மாதாந்தம் பெற்றோலியப் பொருட்களின் விற்பனை விலையைத் தீர்மானிப்பதற்கு இயலுமான வகையில் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் தலைமையில் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கும்,

குறித்த பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் பொறிமுறைக்கமைய மாதாந்தம் பெற்றோலியப் பொருட்களின் விலையைத் தீர்மானிப்பதற்கும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரைப் பிரகாரம் இருவாரத்திற்கு ஒருதடவையோ மாதம் ஒரு முறையோ விலை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சின் செயலாளர், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, ஐ.ஓ.சி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மத்திய வங்கி உள்ளிட்ட தரப்பினர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்க உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய விலைச்சூத்திரத்தின் பிரகாரமே இம்முறை விலை அதிகரிக்கப்பட்டதாகவும் உலக சந்தையில் விலைகள் குறையும் போது அதன் நன்மையை பாவனையாளர்களுக்கு வழங்க உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். 6 அம்சங்களில் 4 அம்சங்களின் பிரகாரமே விலை மறுசீரமைக்கப்பட்டுள்ளது. விலைகளை அதிகரிக்காவிட்டால் அடுத்த தொகை எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு பணம் கையிருப்பில் இல்லை என்று தெரிவித்த அவர் எரிபொருளுக்காக வரிசையில் நிற்கும் நிலை விரைவில் தீரும் எனவும் குறிப்பிட்டார்.

## பாடசாலைகளுக்கான...

பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாயினும் நியாயமான காரணங்களுக்காக பாடசாலைகளை மாற்றுவதற்கு தேவைப்படும் மாணவர்களுக்கு அதற்கான மேன்முறையீட்டை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் ஒன்லைன் மூலமாக அதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படுமென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் மேன்முறையீட்டை சமர்ப்பிக்கவேண்டிய காலம் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படுமென்றும் தெரிவித்துள்ள கல்வியமைச்சு அனைத்து மேன்முறையீடுகளையும் ஒன்லைன் மூலமாக மாத்திரமே கல்வியமைச்சுக்கு அனுப்பவேண்டுமென்றும் நேரடியாக கையளிக்கும் அல்லது வேறு முறையில் வழக்கப்படும் மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்றும் கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் தமிழ் மொழிமூல ஆண்கள் பாடசாலைகள்:

கொழும்பு ரோயல் கல்லூரி 178, கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி 163, மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி 158, யாழ். இந்துக்கல்லூரி 158, கொழும்பு இசிபதன கல்லூரி 156, காத்தான்குடி மத்திய கல்லூரி 155,

யாழ். மத்திய கல்லூரி 155, மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரி 152, சாய்ந்தமருது சாஹிரா கல்லூரி 152, ஹற்றன் ஜோன் பொஸ்கோ கல்லூரி 150, கிண்ணியா மத்திய கல்லூரி 147 தமிழ் மொழிமூல பெண்கள் பாடசாலைகள்: யாழ். வேம்படி மகளிர் உயர் பாடசாலை 163, மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை 162, ஹட்டன் சென்.கபிரியல்ஸ் மகளிர் கல்லூரி 155, மட்டக்களப்பு சிசிலியா மகளிர் கல்லூரி 153, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி 149, கண்டி பதியுதீன் மொகமட் மகளிர் வித்தியாலயம் 149, மாத்தளை ஆமினா மகா வித்தியாலயம் 149, திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் வித்தியாலயம் 147.

## 21 ஆவது திருத்தம் குறித்து...

மற்றும் யோசனைகளை பெறவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இந்த வார இறுதிக்குள் அது தொடர்பான கலந்துரையாடல்களை நிறைவு செய்யவும் அடுத்த வார அமைச்சரவையில் அவை குறித்து மீள ஆராய முடிவு செய்யப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை அமைச்சரவை கூட்டத்தில் மீள இந்த விடயம் குறித்த ஆராயப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள இலஞ்சம், ஊழலை தடுக்கும் வகையில் கணக்காய்வு ஆணைக் குழு மற்றும் கொள்முதல் ஆணைக் குழு என்பவற்றை அமைத்தல், இரட்டை பிரஜைகளுக்கு பாராளுமன்றம் தெரிவாவதை தடுத்தல் உள்ளிட்ட பல அம்சங்கள் இந்த திருத்த யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 19 ஆவது திருத்தத்தை விட அதிக ஜனநாயக அம்சங்கள் புதிய திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்‌ஷ அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான நிமல் சிறிபால டிசில்வா, விஜேதாஸ ராஜபக்‌ஷ, சட்டமா அதிபர், சட்டவரைஞர் திணைக்களம் மற்றும் சட்டத்தரணிகள் 21 ஆவது திருத்த சட்டநகலை தயாரிக்கும் செயற்பாட்டில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து பாராளுமன்றத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையிலும் சுயாதீன ஆணைக்குழுக்களை பலப்படுத்தும் வகையிலும் அரசியலமைப்பில் திருத்தம் செய்யுமாறு ஆர்ப்பாட்டம் புரியும் இளைஞர்களும் எதிரணியும் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் நிலையில் புதிய அமைச்சரவை பதவியேற்றவுடன் புதிய திருத்த யோசனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (பா)

## மருத்துவ நெருக்கடியை தவிர்க்க...

உறுதியளித்துள்ளது. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி அலாகா சிங்குக்குமிடையில் பிரதமர் அலுவலகத்தில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது.

அதன்போது இலங்கைக்கு உலக சுகாதார அமைப்பு பெற்றுக்கொடுக்கும் நிவாரண வேலைத்திட்டத்தின் முதல் கட்டமாக இரண்டு மில்லியன் டொலர் பெறுமதியான சுகாதார வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அந்த அமைப்பு உறுதியளித்துள்ளது.

அதற்கிணங்க தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்துள்ள புதிய சுகாதார வேலைத்திட்டத்தின்கீழ் தற்போதைய நெருக்கடிகளை எதிர்வரும் ஜுலை, ஓகஸ்ட் மாதமளவில் நிவர்த்திசெய்ய முடியுமென உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்கை அதிகரிக்கும் வகையில் உலக சுகாதார நிறுவனம் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்திருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இலங்கையின் சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்காக உலக சுகாதார அமைப்பு பெற்றுக்கொடுக்கும் ஒத்துழைப்புக்களுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கள் தொடர்பில் அவர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார். அதேவேளை, இலங்கையை சுகாதார காப்புறுதிக்கு உட்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அதற்காக உலக சுகாதார அமைப்பின் ஒத்துழைப்பு அவசியமென்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் சுகாதாரத் துறையில் நிலவும் சிக்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமரினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவின் தலைவர் ருவான் விஜயவர்தன சுகாதார அமைச்சின் கொரோனா வைரஸ் தொடர்பான இணைப்பாளர் மற்றும் தொழில்நுட்ப சேவை பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அன்வர் ஹந்தானி ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்

## இராணுவத்தின் கொவிட்19 தடுப்பூசி...

தினங்களில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வருகை தர முடியுமெனவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

உலகின் சில நாடுகளில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் இடம்பெற்று வரும் நிலையில் முன்னேற்பாடாக மீண்டும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் பணிப்புரைக்கமைய கொழும்பு விஹார மாதேவி பூங்கா தடுப்பூசி மையம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

அதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வார நாட்களில் தினமும் காலை 8.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை மேற்படி தடுப்பூசி மையம் செயற்படும் என்றும், ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த மையம் திறக்கப்படாது என்றும் தெரிவித்துள்ளதுடன் இந்த தடுப்பூசி மையத்தினூடாக கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான எந்த தடுப்பூசியையும் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## பொருளாதார சவால்களை...

ஐ.நா. முழுமையான ஆதரவை வழங்குமென ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸிடம் உறுதியளித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான கவலைகள் போன்ற நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்படும் பல பாதிப்புக்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கொழும்பில் உள்ள ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டியை சந்தித்தபோதே அவர் உறுதிவழங்கியுள்ளார். எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய சிரமங்களை அரசாங்கம் முன்னறிவித்துள்ளதாகவும், பாதிப்புக்களைக் குறைக்கும் முகமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் உட்பட, நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விளக்கினார்.

மக்களின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக முக்கிய அரச நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. மற்றும் நன்கொடை நாடுகளின் பங்களிப்புடன் கூடிய மத்திய பொறிமுறையொன்று பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். இருதரப்பு பங்காளிகளுடன் கலந்தாலோசித்து, அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் விவசாயத் துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கினார்.

சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கும், அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும், வேலையின்மை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற பிரச்சினைகள் தொடர்பான கவலைகளுக்குமான ஐ.நா.வின் முழுமையான ஆதரவை ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸுக்கு உறுதியளித்தார். இது தொடர்பில் ஐ.நா. பலதரப்பு முறையீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக வதிவிட ஒருங்கிணைப்பாளர் குறிப்பிட்டார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸுக்கு வழக்கமான ஈடுபாடுகள் மற்றும் விளக்கங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்த அவர், இலங்கை அரசாங்கத்துடன் ஐ.நா. தனது ஒத்துழைப்பைத் தொடரும் என்றும் உறுதியளித்தார்.

## எரிபொருள் விலைகள் மீண்டும்...

விலை 445 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை லங்கா ஐஓசி நிறுவனமும் தமது பெற்றோலின் விலையை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலைக்கு ஏற்றவாறு அதிகரிப்பதாக தெரிவித்துள்ளது. எரிபொருள் விலைகள் தொடர்பான விலைச்சூத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விலைச்சூத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விலைச்சூத்திரத்தில் எரிபொருள் இறக்குமதி செலவுகள், தரையிறக்கும் செலவுகள், விநியோக செலவுகள் மற்றும் வரி செலவுகள் ஆகியவை உள்ளடங்குவதாக தெரிவித்த அவர், இந்த விலைச்சூத்திரத்தில் இலாபம் உள்ளடக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

92 ஒக்டேன் பெற்றோல் ஊடாக 83.71 ரூபா நஷ்டம் ஏற்பட்டுவந்ததோடு 82 ரூபாவினாலே விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. 95 ஒக்டேன் இறக்குமதிக்கு 444 ரூபா செலவாகும் நிலையில் 450 ரூபாவாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒட்டோ டீசலுக்கு 400.60 சதம் செலவாகும் நிலையில் 400 ரூபாவாக விலை அதிகரித்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், சுபர் டீசலுக்கு 444.95 ரூபா செலவு ஏற்படும் நிலையில் விலையை 445 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். மண்ணெண்ணெய் 87 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. ஆனால் அதற்கு 362.26 சதம் செலவாகிறது. 275.26 ரூபா நஷ்டத்தில் அது விற்கப்படுகிறது. மண்ணெண்ணெய் விலைகளை அதிகரிக்கவும் அமைச்சரவை அனுமதி கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (பா)

# உள்ளூராட்சி சபை நிறுவனங்களை கலைத்து விசேட ஆணையாளரின் கீழ் கொண்டுவருக

## இலங்கை நிருவாக சேவை சங்கம் வேண்டுகோள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி நிறுவனங்களை உடனடியாக கலைத்து உள்ளூராட்சி சபைகளை விசேட ஆணையாளர்களின் கீழ் செயற்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை நிருவாக சேவை சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைகள் பெருமளவு எண்ணிக்கையானோரின் கீழ் உள்ள நிலையில் அது அரசாங்கத்திற்கு பெரும் சுமையாகியுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. புதிய உள்ளூராட்சி சபை தேர்தல் முறைமையின் கீழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ள நிலையில் அவை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமக்கமுடியாத பொருளாதார சுமை ஏற்பட்டுள்ளது என அந்த சங்கத்தின் பிரதித் தலைவர் தம்மிக்க முத்துகல தெரிவித்துள்ளார்.

சில மாநகர சபைகளின் முதல்வர்களின் மாதாந்த செலவு ஒரு மில்லியனையும்விட அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்தின் செலவினங்களை குறைப்பதானால் இத்தகைய செலவுகளை இல்லாதொழிப்பது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் நிலையங்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள எரிபொருள் பவுஸர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அநாவசிய குழப்ப நிலைகளினால் வீதிகள் மூடப்பட்டு பெரும் பாதிப்புகளை மக்கள் எதிர்கொள்கின்றனர். இவ்வாறு வீதிகள் மூடப்படுவதால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் உட்பட வீதிகளில் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே, இவ்வாறான போராட்டங்களை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

## நிதியியல், சட்ட... 03ஆம் பக்கத் தொடர்

பெறுகை பிரான்ஸ் M/s Lazard நிறுவனத்திற்கு வழங்கவும் சர்வதேச சட்ட மதியுரைஞர் சேவைக்கான பெறுகை பிரான்ஸ் M/s Clifford Chance LLP நிறுவனத்திற்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## எம்.பிக்களின் வீடுகளில்... 03ஆம் பக்கத் தொடர்

விவசாயிகளின் பயிர்களுக்கு இரசாயன உரம் கிடைக்காத நிலையில் சில அரசியல்வாதிகள் தமது வீடுகளில் உரங்களை சேமித்து வைத்திருப்பது தமக்கு ஆச்சரியத்தை அளிப்பதாகவும் அவர் கூறினார். எவ்வாறாயினும், தேசிய உர செயலகத்தின் அறிக்கைகள் கிடைத்த பின்னர், எரிந்த வீடுகளில் காணப்படும் உரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்று வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (பா)

## பதில் நிதியமைச்சராக...

புதிய நிதி அமைச்சர் குறித்து வினவப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், புதிய நிதி அமைச்சரை ஜனாதிபதி விரைவில் நியமிப்பார். அதுவரை அவர் பதில் அமைச்சராக செயற்படுவார் என்று தெரிவித்தார்.(பா)

## அத்தியாவசிய சேவைகளுக்கு...

இது தொடர்பான சுற்றறிக்கை நேற்று வெளியிடப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் தினேஷ் குணவர்தன, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடி கலந்துரையாடியுள்ளதோடு தேவையான ஊழியர்கள் குறித்து நிறுவன பிரதானிகள் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

## வாகனங்களுக்கான...

வரும் வகையில், மோட்டார் சைக்கிள்களுக்கு 2,500 ரூபாவுக்கும், முச்சக்கரவண்டிகளுக்கு 3,000 ரூபாவுக்கும் மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன், கார்கள், வேன்கள் மற்றும் ஜீப் ரக வாகனங்களுக்கு, 10,000 ரூபாவுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது. எவ்வாறிருப்பினும், பஸ்கள், லொறிகள் உட்பட வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் உழவு வண்டிகள் உள்ளிட்ட வாகனங்ளுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் அமுலாக்கப்பட மாட்டாது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## ஜோன்ஸ்டன் எம்பியிடம்...

அந்த திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வாக்குமூலம் வழங்கிக் கொண்டிருந்த வேளை குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு முன்பாக அவரை உடனடியாக கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் ஒரு தரப்பினரே மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 1591 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 719 பேர் இது வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## முற்போக்கான அனைத்து...

இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்குள்ளும், பாராளுமன்றத்துக்கு வெளியேயும் மக்கள் சார்பில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்வதற்கு கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கவில்லை எனவும் மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்தார்.

## 21 ஐ கொண்டு வரும் முயற்சி...

உறுதி செய்வதும் அரசாங்கம் கட்டாயம் முன்னெடுக்க வேண்டிய ஒன்றாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கம் முன்னெடுக்கும் மோசடி செயற்பாடுகளுக்கும் ஏமாற்று வித்தைகளுக்கும் உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

## நாட்டை விட்டு வெளியேற...

மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை குழு ஒன்று நிலாவெளி பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் 7 பெண்களும் 3 குழந்தைகளும் அடங்குவதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், அம்பாறை, இரத்தினபுரி, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## குறைந்த பட்ச பஸ்...

அதற்கிணங்க 27 ரூபாவாக இருந்த குறைந்தபட்ச பஸ் கட்டணம் 32 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இந்த அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று அனுமதி வழங்கினார். சிபெட்கோ மற்றும் ஐஓசி ஆகிய நிறுவனங்கள் எரிபொருள் விலையை அதிகரித்ததன் காரணமாகவே பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## கிழக்கின் குரல்

# இடர்களை, களையும் பதிகம் பாடும் பாரிய தேசிய திட்டம்

### காரைதீவு சித்தராலயத்தில் ஆரம்பம்

(காரைதீவு குறூப்நிருபர்)

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவு தட்டுப்பாடு போன்ற இடர்களை, களைய வேண்டி ஆலயங்களில், இடர், களையும் பதிகம்பாடும் பாரிய தேசிய திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரனின் ஒழுங்கமைப்பில் நாடு பூராக தெரிவுசெய்யப்பட்ட ஆலயங்களில் இது நடைபெறவுள்ளன.

இதன், முதல் நிகழ்வு அண்மையில் காரைதீவில் இடம்பெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி ஆலயமும், சித்தானைக் குட்டி அறநெறிப்பாடசாலையும் இணைந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை, திருநெடுங்களத்தலத்து இடர், களையும் பதிகம் ஓதல் நிகழ்வுகள் ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வானது ஆலயத்தின் தலைவர் பொன்.பாலந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், உபதலைவர் க.தட்சணாமூர்த்தி, பொருளாளர் த.தவக்குமார், உபசெயலாளர் திரு செ.விஜயரெத்தினம்,நிர்வாக சபை உறுப்பினர்களான சீ.யோகராஜா, பி. கபாஸ்கர், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவலோஜி சிவராஜா மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பக்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்,ஏற்பாடுகளை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.

## அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் சிரமதான நிகழ்வு



(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் டெங்கு ஒழிப்பு மற்றும் உட்புறங்களை சுத்தம் செய்யும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் சிரமதானம் செய்து சூழலை சுத்தம் செய்வதை படத்தில் காணலாம்.

## தோப்பூர் பிரதேச மக்களுக்கு எரிபொருள் விநியோகம்

(தோப்பூர் குறூப் நிருபர்)

பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லாததால், தோப்பூர் பிரதேச மக்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில், பல்வேறு இன்னல்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.



தோப்பூர் பிரதேசத்திலிருந்து எரிபொருட்களை பெறுவதற்கு 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள சேருநுவர மற்றும் மூதூர் பகுதிகளுக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.இவ்வாறு சென்றாலும்,சில வேளைகளில்

எரிபொருளில்லாது திரும்பி வரும் நிலைமைகளும் ஏற்படுகின்றன.இதையடுத்து தோப்பூர் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம்,இம்மக்களுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.தோப்பூர் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஏ.எப்.எம்.நிசாத் மற்றும் சங்க உறுப்பினர்களின் முயற்சியால் தோப்பூர் பிரதேசத்திற்கான எரிபொருள் (24) வழங்கப்பட்டது.தோப்பூர் பொதுமக்கள் இதற்கு நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புளியடிக்குடா புனித செபஸ்தியர் ஆலய வருடாந்த பெருவிழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தின் 104 வது வருடாந்த பெருவிழா, பங்குத்தந்தை அருட்பணி அனிஸ்டன் மொறாயஸ் அடிகளார் தலைமையில் ஆரம்பமானது.

திருச்செபமாலையினை தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வு,வருடாந்த பெருவிழா கொடியிறக்கத்துடன் (22) நிறைவுவடைந்தது.

வருடாந்த திருவிழாவின் நவநாட்காலங்களில் தினமும் 5.30 மணிக்கு திருச்செபமாலையும், பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும் இடம்பெற்றன. கடந்த (21) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு முதல் நன்மை மற்றும் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் திருப்பலியானது மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அத்தோடு கடந்த சனிக்கிழமை மாலை திருச்சுருவப் பவனி, வழமையான வீதிகள் ஊடாக சென்று ஆலயத்தை சென்றடைந்தது. பின்னர் திருப்புகழ்மாலை ஆராதனையும், நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றன.



நவநாட் காலங்களில் அருட்தந்தையர்களான அருட்பணி ரீ.சாயநாதன், எஸ்,ஜே றொஷான் சுவைக்கீன்ஸே' எஸ்,ஜே லெபோன் சுதன் OMI, ஏ.தேவதாசன், ஏ.ஜென்சன் லொயிட், எஸ்.ஜே.சுலக்ஷன், சீ.வீ.அன்னதாஸ், எஸ். ஜோசப் அற்புதராஜ் மற்றும் அருட்தந்தை நிர்மல் சூசைராஜ் ஜே,டி, எச் உள்ளிட்ட அடிகளார்களால் சிறப்பு அருளுரைகளுடன் கூடிய திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

பெருவிழா தினத்தன்று (22) ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலி கொடுக்கப்பட்டு, காலை 7.00 மணிக்கு பெருவிழா கூட்டுத்திருப்பலி அருட்பணி எக்ஸ்.ஐ.ரஜீவன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பெருவிழா கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் இறுதி ஆசீருடன் கொடியிறக்கப்பட்டு பெருவிழா நிறைவடைந்தது. பெருவிழா சிறப்பு நிகழ்வாக அன்னதானம் வழங்குதலும், அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு டொம்போலா விளையாட்டும் இடம்பெற்றது.

# நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை சிறுபான்மை தலைவர்களே விரும்பினர் - டக்ளஸ்

(ஓமந்தை விஷேட நிருபர்)

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை விரும்பியவர்கள் சிறுபான்மை தலைவர்களேயென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற கட்சியின் வட்டார அமைப்பாளர்களின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக உத்தியோகபூர்வ முடிவுகள் ஏதும் வழங்கப்படவில்லை. அவ்விடயம் அரசியலுக்காக பேசப்பட்ட விடயமோ தெரியாது.இது தொடர்பாக ஏதும் கலந்துரையாடல்கள் நடைபெற்றதாக எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு கச்சதீவினை இந்தியாவிற்கு வழங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படாது.

அரசியலமைப்பின் 21வது சீர்திருத்தமானது நாட்டினுடைய பாராளுமன்றத்திற்கும், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கும் இடையிலான அதிகாரங்களை பற்றியதாகும். எந்தவகையிலும் 13வது திருத்தமும், 21வது திருத்தமும் சம்மந்தப்பட்டதல்ல.



ஒரு காலகட்டத்தில், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை தமிழ் தேசிய தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், அல்லது மலையக மக்களுடைய தேசிய தலைவர் தொண்டமான், முஸ்லிம் மக்களுடைய தலைவர் அஷ்ரப் ஆகியோரே வலியுறுத்தி வந்தனர். அதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையானது சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என அவர்கள் கூறினர். மீனவர்கள் பிரச்சினையை இயன்றளவு தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

இந்திய மீனவர்களின் இழுவை படகுகளின் அத்துமீறல்கள், சட்டவிரோத செயற்பாடுகளால் வடமாகாண மீனவர்களின் வளங்கள் அழிக்கப்படுகி ன்றன. இவை பாரிய பிரச்சனைகளாக காணப்படுகின்றன. இச்செயற்பாடுகளால் கடற்றொழிலாளர்களின் தொழில் உபகரணங்களும் அழிக்கப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகண்டு வருகின்றோம். அதேபோன்று எரிபொருள் பிரச்சனைக்கு தீர்வு எட்டப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

## போதைப்பொருள் வைத்திருந்தவர் கைது

(சாவகச்சேரி விஷேட நிருபர்)

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில், நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர், கச்சாய் பகுதியில் வைத்து இந்நபரை (23) கைது செய்தனர். உதவி மதுவரி ஆணையாளர் றொஷான் பெரேராவின் வழிநடத்தலில், சாவகச்சேரி மதுவரித் திணைக்கள மதுவரி பரிசோதகர் வே.ரசிகரன் தலைமையிலான குழுவினர் இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.கைதான சந்தேக நபரிடமிருந்து எட்டு கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (24) இச்சந்தேக நபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது, முப்பதாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

## நல்லூர், நீர்வேலி ஆலயங்களில் நாவலர் ஆண்டு சொற்பொழிவுகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் (2022) இளம் இந்துச்சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக, யாழ்.மாவட்ட இந்துசமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சிவஸ்ரீ பால. திருகுணானந்த குருக்கள் (றொறன்ரோ, கனடா) அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகின்றன.

21 ஆவது சொற்பொழிவு, நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் (27) பி.ப 3.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி சுபேந்தினி லிங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது .

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் கல்விப்பணி' எனுந்தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் சொற்பொழிவாற்றுவார். இதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் (27) மாலை 5.00 மணிக்கு பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவை சைவப் புலவர் கு.சுமூகலிங்கம் 'சைவ வாழ்வு' என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

(அ.கனகசூரியர்)

## சட்டவிரோதமாக சிகரட் விற்றவர் படையினரால் கைது

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

தடைசெய்யப்பட்ட சிகரெட்டுகளை வியாபாரம் செய்துவந்த ஒருவரை,விஷேட அதிரடிப்படையினர் (23) காத்தான்குடியில் கைது செய்துள்ளனர்.

இவரின் வீட்டை சுற்றிவளைத்த விஷேட அதிரடிப்படையினர், அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த நான்கு பண்டலிலிருந்த 1020 சிகரட்டுக்களை மீட்டதுடன் 65 வயது நபரையும் கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

பின்னர்,காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இவரை ஒப்படைத்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவின் இரகசிய தகவலுக்கமைய களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வு பிரிவினரும் இணைந்து குறித்தி வீட்டைச்சுற்றி வளைத்தனர்.

## தமிழக சிறையிலுள்ள உறவுகளை விடுவிக்குமாறு கோரி தீர்மானம்

(புதுக்குடியிருப்பு விஷேட நிருபர்)

தமிழக சிறையிலுள்ள உறவுகளை விடுவிக்க கோரி மாந்தை கிழக்கு பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. நேற்று (24) சபையின் அமர்வு, தவிசாளர் மகாலிங்கம் நந்தன் தலைமையில் இடம்பெற்றபோதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரத போராட்டத்தை தொடரும்,இலங்கை தமிழ் உறவுகளை விரைவில் விடுவிக்க கோரியே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடவுச்சீட்டின்றி, உள்நுழைந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள்,திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களும்,தங்களை விடுதலை செய்யுமாறு உண்ணாவிரத



போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, இவர்களின் வழக்குகளை துரிதப்படுத்தி,விடுதலைக்கு வழிகோல வேண்டும் என்றே, மாந்தை கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் வைரமுத்து ஜெயரூபன் இத்தீர்மானத்தை கொண்டுவந்தார். சபை உறுப்பினர்கள் ஏகமனதாக இதை, ஆமோதித்ததால் தீர்மானம் நிறைவேறியது.

இதேவேளை, குறித்த தீர்மானம் தமிழக முதல்வரையும், இலங்கைக்கான இந்திய தூதரையும் விடுதலையை துரிதப்படுத்துமாறு கோரியிருக்கிறது.

## சமாதானக் குழுக்களின் சமாதான சுற்றுப்பயணம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்ட சமாதானமும் சமூகப்பணியும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமாதான சுற்றுப்பயணம் சனிக்கிழமை (21) அம்பாறை மாவட்ட சமாதான குழுக்களுக்கு இடையில் தம்பட்டை "சுவாட்" நிலையத்தில் இடம்பெற்றது. நல்லிணக்கத்தினுடாக சமாதானத்தை எதிர்கொள்ளல், தற்போதைய அரசியல் மாற்றத்தை மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், கொண்டு வரல் போன்ற விடயங்கள் இந்த ஒன்றுகூடலில் கலந்துரையாடப்பட்டன.

அம்பாறை மாவட்ட சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தின் இணைப்பாளருமான த.ராஜேந்திரன், திட்ட உத்தியோகத்தர் ரோகினி, பிரதேச மாவட்ட நல்லிணக்க குழு இணைப்பாளர்கள் உட்பட இளையோர் குழுக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். இச்சமாதான பயணத்தில் ஒலுவில் கிழக்கு பல்கலைக்கழக நூலகம், ஒலுவில் துறைமுகம் போன்ற இடங்களையும் இவர்கள் பார்வையிட்டனர். தெஹியத்தகண்டி, நாவிதன்வெளி, காரைதீவு, நிந்தவூர் மற்றும் இறக்காமம் ஆகிய சமாதானக் குழுக்கள் இதில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம் மாவட்டத்தில் கடும் மழை;

# 5,791 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 20,000 பேர் பாதிப்பு

## பரீட்சை நிலையங்களுக்குள் வெள்ளம்; பரீட்சார்த்திகளும் பாதிப்பு





**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

நேற்று (24) அதிகாலை முதல் பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 5 ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 122 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

எனினும், இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்படவில்லை எனவும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தத்தமது வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 600 மாணவர்கள் பரீட்சை எழுதுவதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

எனினும், அவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டு எவ்வித தடங்களுமின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட புத்தளம் மன்னார் வீதி, கடையார்குளம், நூர் நகர் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதிகளும், புத்தளம் பிரதேச சபைக்கு உட்பட்ட ரத்மல்யாய, அல்காசிமி சிட்டி மற்றும் பாலாவி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் வெள்ளநீர் புகுந்தமையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, புத்தளம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சாஹிரா தேசியப் பாடசாலை, புத்தளம் சென். ஆன்ட்ரூஸ் மத்திய கல்லூரி மற்றும் புத்தளம் இந்து மத்தியக் கல்லூரி என்பனவும் வெள்ளத்தில் மூழ்கின.

இதனால் பரீட்சார்த்திகள் பல சிரமங்களுக்கு உட்பட்டனர்.

திட்டமிட்டபடி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த பரீட்சைகள், தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக 9.45 மணிக்கே ஆரம்பமாகியுள்ளதாக மாணவர்கள் குறிப்பிட்டனர்.

புத்தளம் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், புத்தளம் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், பெற்றோர்கள் ஆகியோருடன் முப்படையினரும் கூட்டாக இணைந்து வெள்ளநீரில் பாதிக்கப்பட்ட பாடசாலையிலிருந்து மாணவர்களை இயந்திர படகு சேவை மூலம் பாதுகாப்பாக மேல்மாடி வகுப்பறைக்கு அழைத்து சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

# கவிஞர் கோசல்யா ஜெர்மனியில் காலமானார்



ஜெர்மனியில் வசித்து வந்த கவிஞர் கோசல்யா சொர்ணலிங்கம் (23) காலமானார். இலக்கியத் துறையில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்த இவர், துணிச்சலுடன் கருத்துகளை முன்வைக்கும் ஆளுமைமிக்கவர்.

கவியரங்க மேடைகளில் சோபித்தவர். கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். ஜெர்மனி சுவிஸ் ஆதியாமிடங்களில் நடைபெற்ற பல இலக்கிய நிகழ்வுகளில் இடம்பெற்ற கவியரங்குகளில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்.

வானொலி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டவர்.

அடுத்தடுத்து நிகழும் படைப்பாளிகளின் இழப்புகள் மனதைக் கலங்கடிக்கின்றன. சகோதரி கோசல்யாவுக்கு எமது அஞ்சலி..!

கம்புருபிடிய கமநல சேவை உரிமையாளரினால்

# க.பொ.த சா/த மாணவர்களுக்கு இலவச பஸ் சேவை ஏற்பாடு

**மாத்தறை தினகரன் நிருபர்**

இம்முறை நடைபெறும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி இலவச போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கு கம்புருபிடிய கமநல சேவை நிறுவனத்தின் உரிமையாளர் தில்ஹான் சமரவிக்ரம முன்வந்துள்ளார்.

இச்சேவை கம்புருபிடியில் உள்ள கமநல சேவை நிறுவனத்தின் முன்னால் தினமும் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி மாத்தறையை சென்றடையும். மாத்தறை நகரிலுள்ள சுஜாத்தா ம.வி, ராகுல ம.வி, புனித தோமஸ் ஆண்கள் கல்லூரி, புனித ஸேவியர் கல்லூரி, புனித தோமஸ் மகளிர் கல்லூரி, மஹிந்த ராஜபக்ஷ ம.வி ஆகிய பரீட்சை நிலையங்களுக்குச் செல்லும் பரீட்சார்த்திகள் இச்சேவையை பயன்படுத்த முடியும்.

எரிபொருள் பிரச்சினை, அதிகரித்த பஸ் கட்டணம் என்பவைகளினால் அவதியுறும் மாணவர்களுக்கு இந்த இலவச சேவை ஆரம்பிக்கப்பட்டதாக தில்ஹான் சமரவிக்ரம தெரிவித்தார்.


## தேசிய உப்பு நிறுவனம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### வாடகை அடிப்படையில் வாகனங்களை சேவைக்கு அமர்த்துதல்

செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் பொருத்தமான வாகனத்தினை வழங்குவதற்காக தகைமையான நபர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை தேசிய உப்பு நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**விதிகளும் நிபந்தனைகளும்**

| | |
|---|---|
| **வாகன வகை:** | ஒரு வாகனம் - ஒட்டோகியர் (டபிள் கெப்/ ஜீப்) |
| **வாகன நிலையம்:** | 2018ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின் உற்பத்தி செய்யப்பட்டதுடன் வாடகைக்குப் பெறும் வேளையில் 75000 கி.மி. இற்கு குறைவான ஓட்ட வீதத்தைக் கெண்டிருத்தல் |
| **ஒப்பந்த காலம்:** | 12 மாதங்கள் |
| **வழங்க வேண்டிய சேவைகள்:** | வழிப்பயணத்தின் சகல பராமரிப்புகளையும் மனுதாரர் மேற்கொள்ளல் வேண்டும். அத்துடன் வருடாந்த அனுமதிப்பத்திரம், புகைப் பரிசோதனை, காப்புறுதி உள்ளடங்கலான திருத்த வேலைகள். |
| **வாகனங்களைப் பதிலீடு சம்பந்தமாக:** | 24 மணி நேரத்திற்கு மேலான திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புகள் இருப்பின் ஓர் சமமானவகையிலான வாகனம் பதிலீடாக வழங்க வேண்டும். |

2022.05.26 முதல் 2022.06.10ம் திகதி வரை எந்த வேலை நாட்களிலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ரூ. 1500.00 ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில், பொது முகாமையாளருக்கு ஓர் எழுத்துமூல வேண்டுதலை மேற்கொள்வதன் மூலம், ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகள் தேசிய உப்பு நிறுவனத்தின் காசாளருக்கு காசாக செதுத்துதல் வேண்டும்.

விலைமனுக்கள் தேசிய உப்பு நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடப்படல் வேண்டும். அல்லது 2022.06.10ம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் தேசிய உப்பு நிறுவனத்தின் சபை அறையில் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு**
**தேசிய உப்பு நிறுவனம்**
**கைத்தொழில் அமைச்சு, 561/3, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு-05.**


# காலி மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் தீவிரம்

**வெலிகம தினகரன் நிருபர்**

காலி மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் மிகத் தீவிரமாக பரவி வருவதாக காலி மாவட்ட சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை மூன்றுபேர் இம்மாவட்டத்தில் எலிக்காய்ச்சலினால் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வயல் வேலைகளில் ஈடுபடுவோரே இவ்வாறு இக்காய்ச்சலினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வயல் வேலை செய்வோர் மிக அவதானத்துடன் செயற்படுமாறு வேண்டப்படுகின்றனர். இவ்வாறானவர்களுக்கு காய்ச்சல் ஏற்படின் உடன் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறும் வேண்டப்படுகின்றனர்.

# வெளிநாட்டு துப்பாக்கி வைத்திருந்த நபர் கைது

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த சந்தேகத்தில் நபர் ஒருவரை கதிர்காமம் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது கைது செய்துள்ளனர்.

சிதுஜயபுர, கிரிந்தை, கொடான பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கியை பயன்படுத்தி சந்தேக நபர் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்பது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிரிந்தை பொலிஸார் தெரிவித்தனர்.




கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற வருடாந்த லயன்ஸ் கழக விருது வழங்கும் விழாவில் பத்து வருட அனுபவமுள்ள மஹரகம கோல்டன் ஸிட்ஸ் லயன்ஸ் கழகத்தின் உறுப்பினரான ஆச்சாய ஆலோக்கா வகலவத்த சிறந்த லயன்ஸ் கழகத்திற்கான விருதைப் பெற்றுள்ளார். விழாவில் விருது வரை தாம் செல்வதற்கு தமக்கு அனைத்து விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

# சிறுமியின் மரணம் தொடர்பில் பஸ் சாரதி கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பஸ் வண்டியில் பயணிக்கும் போது ஏற்பட்ட விபத்தில் பலியான சிறுமியின் மரணம் தொடர்பில் பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவனல்லை அரனாயக்க வீதியில் கிரிகல சந்தியில் பஸ் பயணித்துக் கொண்டிருந்த போது இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

தாயின் மடியில் இருந்த குழந்தை யன்னல் பக்கமாக சரிந்ததில் வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த லொறியொன்றில் மோதியதில் தலை சிதறுண்டதால் இம்மரணம் இடம் பெற்றுள்ளதாக தாயின் வாக்குமூலத்தில் இருந்து தெரியவந்துள்ளது

இச்சம்பவத்தில் மரணமானவர் மூன்றரை வயதான உஸ்ஸாபிட்டியப் பகுதியைச் சேர்ந்த சிறுமியாவார் என பொலிஸார் தெரிவித்தனர். மாவனல்ல அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் சிகிச்சை வெற்றியளிக்காத நிலையில் சிறுமி மரணமடைந்துள்ளார் என இவ்வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# ஓய்வுபெற்ற அதிபர் யூசுப்லெப்பை காலமானார்

**ஹேவாஹெட்ட தினகரன் நிருபர்**

ஹெம்மாத்தகமயின் பிரபல சமுகசேவையாளர் ஓய்வுபெற்ற அதிபர் எம்.எல் யூசுப் லெப்பை காலமானர். தும்புலுவாவ பள்ளி பரிபாலன சபைத் தலைவரும் ஹெம்மாத்தகம பள்ளிவாசல்களின் சம்மேளன செயலாளரான இவர், கேகாலை பிராந்திய திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் மாவனெல்லை நீதி பரிபாலன பிரிவுக்கான இணக்க சபை உறுப்பினராவும் சேவையாற்றியுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியாரகவும் அதிபராகவும் இவர் சேவையாற்றியுள்ளதுடன் பல்வேறு பொதுநல அமைப்புகளில் பல உயர் பதவிகளையும் வகித்துள்ளார். அன்னாரின் ஜனாஸா தும்புலுவாவ மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# மலையக இலக்கிய மாநாடு ஜூன் 11 லண்டனில்

## பிரதம அதிதியாக H.H விக்ரமசிங்க



லண்டனில் அடுத்த மாதம் ஜூன் 11ஆம் திகதி நடைபெறவுள்ள மலையக இலக்கிய மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக மாத்தளையைச் சேர்ந்த எச்.எச்.விக்ரமசிங்க கலந்து சிறப்பிக்க உள்ளார். இவர் கல்விமான் இர.சிவலிங்கம், திருச்செந்தூரன், வீர கேசரி எஸ்.எம்.கார்மேகம், பேராசிரியர்.சோ சந்திரசேகரம் அவர்களின் வழிகாட்டலில் உருவானவர். மலையகத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பான 'கதைக்கனிகள்' (1971) வெளியீட்டில் இவரது பங்கு முக்கியமானது. நவாலியூர் க.சொக்கநாதனின் 'குறவஞ்சி' (1993), மாத்தளை வடிவேலனின் 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்'(1997), 'மலையக பரிசுக்கதைகள்' (1994), 'அமரர் இர.சிவலிங்கம்: மலையக சிந்தனைகள்' (2001), 'மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ.சந்திரசேகரன்'(2014,2017), 'எஸ்.எம்.கார்மேகம் வாழ்வும் பணியும்' (2018), பி.ஆர்.பெரியசாமியின் 'தோட்டத்தொழிலாளர் வீரப் போராட்டம்' (2021), சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' (2022), சி.வி.வேலுப்பிள்ளையின் ' மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' (2022) ஆகிய நூல்களைப்பதிப்பித்து மலையக பதிப்புத் துறையில் அழுத்தமான தடத்தைப்பதித்துள்ளார்.

மலையக அரசியல்,சமூக, இலக்கிய ஆவணங்களைச் சேகரிப்பதில் சளைக்காது உழைத்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நுகர்வோர் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த தம்பதியினர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வர்த்தக நிலையத்தை சோதனையிடச் சென்ற நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அவரது மனைவியையும் கடந்த (21) கைது செய்துள்ளதாக இராஜாங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

இராஜாங்கனை யாய13 பகுதியைச் சேர்ந்த தம்பதியினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் எரிபொருளை பதுக்கிவைத்து கூடுதலான விலைக்கு அவைகளை விற்பனை செய்வதாக அநுராதபுரம் நுகர்வோர் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய சுற்றிவளைப்பை மேற்கொள்ள சென்ற போது, குறித்த தம்பதியினர் வர்த்தக நிலையத்தை சோதனை இடுவதற்கு அனுமதி வழங்காமல் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.


திகதி 23.05.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4764
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,789,430.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,929,948.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 8 6 8 7 9 3

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.05.18 சீட்டிழுப்பு இலக்கம் 3006
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,043,800.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 40 49 52 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,147,939.76

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0073
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,869,460.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 18.05.2022
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 11 28 39 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,520,667.80

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /18
சீட்டிழுப்பு இலக்கம் : 794
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,150,600.00
வெற்றி இலக்கினம் I வெற்றி இலக்கங்கள் 19 21 22 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,341,717.20

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1112
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,954,620.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 252,672,098.00
O 12 11 30 76 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு - (NCB) இறக்குமதி மற்றும் வழங்கல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள காகிதங்கள் மற்றும் போர்ட்களை (Papers and Board) வழங்குவதற்கு இந்திய உற்பத்தியாளர்களின் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டும் (இந்திய கடனுதவித் திட்டத்தினால் நிதியிடப்படுவதனால்) விலைமனுக்களை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அழைக்கின்றார்.

| கோவைக் குறியீடு | தொகை | உருப்படி | விலைக் கோரல் பிணை முறி |
|---|---|---|---|
| SPC/SUP/FI/001/2022/26 | 100 MT | Offset White Printing Paper – 24”x36” / 70 gsm | 290,000/= |
| SPC/SUP/FI/001/2022/27 | 100 MT | Double side Coated Art Board – Gloss / 508x635 mm /230 gsm | 290,000/= |
| SPC/SUP/FI/001/2022/28 | 75 MT | One side Coated Art Board – White Back /625 x860mm/250 gsm | 200,000/= |
| SPC/SUP/FI/001/2022/29 | 100 MT | Double side Coated Art Board – Gloss/ 540x784mm /220 gsm (min) | 290,000/= |
| SPC/SUP/FI/001/2022/30 | 100 MT | Imported White Writing Paper - 610mm / 70gsm | 290,000/= |
| SPC/SUP/FI/001/2022/32 | 150 MT | Imported Offset White Printing Paper – 750mm / 80 gsm | 400,000/= |

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையாக பின்வரும் தகுதி மூலப்பிரமாணங்களை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. முகவரின் நிலைமை உற்பத்தியாளரின் அங்கீகாரம் / அட்டோர்ணி தத்துவம் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு
3. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-06-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-05-25ஆம் திகதி முதல் 2022-06-13ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஒரு தொகுதிக்கு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவைச் செலுத்தி, பாதுக்க, பனாலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், வழங்கல் முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வி குறியீட்டிலக்கத்தைக் குறிப்பிட்டு பாதுக்க, பனாலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பனாலுவ, பாதுக்க எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2022-06-15ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.
6. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட நாள் முதல் 45 நாட்காட்டி நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
7. கோரிக்கை பிணை முறியாக பண வைப்பு அல்லது அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் / பொது முகாமையாளருக்குச் செலுத்தக்கூடியதாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை 2757500 எனும் தொலைபேசி / தொலைநகல் இலக்கத்தினூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ, பாதுக்க.**
**2022-05-24.**

SPC

# கேள்வி அறிவித்தல்
### புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்
### கழிக்கப்பட்ட பொருட்களை விற்றல் (யக்கல களஞ்சிய கட்டிடத்தொகுதி)

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் யக்கல வெரல்லவத்த களஞ்சிய கட்டிடத்தொகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கீழே தரப்பட்டுள்ள பாவனையில் இருந்து அகற்றப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பொருட்களின் வகை மற்றும் பொருட்களின் இலக்கம் | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 (அலுவலக உபகரணங்கள்) | Computer (CPU) | 31 |
| | Laptop Computer | 12 |
| | UPS | 70 |
| | Scanner Machine | 08 |
| | Fax Machine | 05 |
| | Finger Machine | 05 |
| | Cash Counter Machine | 07 |
| | Fridge | 01 |
| | LCD Monitor | 24 |
| | CRT Monitor | 52 |
| | Photocopy Machine | 12 |
| | Water Dispenser | 06 |
| | Printers | 70 |
| | Projectors | 01 |
| | Calculators | 41 |
| | GPS | 09 |
| | Digital Camera | 08 |
| | Laminating Machine | 01 |
| | Telephone (Cable) | 52 |
| | Pedestal Fan | 65 |

இப்பொருட்களை தனித்தனியாக விற்கப்படமாட்டாது அத்துடன் பொருட்களின் வகையுடன் சம்பந்தப்பட்ட பொருட்களின் மொத்தமும் ஒரு கொள்வனவாளருக்கு விற்பனை செய்யப்படும். மேற்படி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரர்க்கு ரூ.10,000.00 (மீளளிக்கப்படும்) மற்றும் ரூ.1,00.00 மீளளிக்கப்படாத தொகையை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் தலைமையகத்திற்கு செலுத்தியதன் பின்பு பெறுகைப்பிரிவில் குறித்த விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

2022.05.26 ஆம் திகதி முதல் வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.4.00 வரை குறித்த பொருட்களை யக்கல வெரல்லவத்த களஞ்சிய வளாகத்தில் பரீட்சிக்கலாம். அதனடிப்படையில் இதற்காக ஆர்வம் காட்டுகின்றசாரார் குறித்த விண்ணப்பத்தை நிரப்பி 2022.06.08 ஆம் திகதி மு.ப.2.00 இற்கு முன்பு அவ்விலைமனுக்களை “தலைவர், பெறுகைக்குழு, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், இல.569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே” என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நிர்வாகப் பிரிவில் உள்ள குறித்த பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்களை அனுப்பும் போது கடித உறையின் மேல் மூலையில் “களஞ்சியத்திலிருந்து அகற்றப்பட்ட பொருட்களுக்கான விலைமனுக்கள்” என்று குறிப்பிடுங்கள். விலைமனுக்களை திறக்கப்படும் நேரத்தில் விலைமனுக்களை சமர்ப்பித்துள்ளோருக்கு சமுகமளிக்க முடியும் அத்துடன் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல -569,**
**எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே**

NSB
# தேசிய சேமிப்பு வங்கி
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல: NSB/PT/ITE/2022/12**

**SUPPLY, INSTALLATION, COMMISSIONING AND MAINTENANCE OF 02 NO’S OF 250KVA GENERATORS FOR THE DATE CENTRE**

தேசிய சேமிப்பு வங்கி அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களிடமிருந்து மேற்காணும் கேள்விக்கு இயைபான முன்மொழிவுகளுக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | 02 No’s of 250KVA Generators for the date center |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 15,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 700,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2022-06-14 பி.ப. 3.00 மணி |
| **கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம்** | 2022-06-15 மு.ப. 10.00 மணி |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2022-05-23ஆம் திகதியிலிருந்து 2022-06-14ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் கேள்வி திறக்கப்படும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த காலப்பகுதியான 120 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (வழங்கல்) பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**

# கேள்வி அறிவித்தல் – கொட்டகலை பிரதேச சபை.
## வட்டகொடை இல 01, 02 புதிய கட்டிடம் குத்தகைக்கு விடும் கேள்வி.

01. கொட்டகலை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க்காணும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டகொடை இல 01, 02 புதிய கட்டிடம் 01.07.2022ம் திகதி தொடக்கம் 30.07.2052 ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்காக பிரதி, மூலபிரதி என இரண்டு பிரதிகளுடன் கூடிய சீல் செய்யப்பட்ட கேள்விகள் 20.06.2022 ம் திகதி முற்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
02. ம.மா/உள்ளூராட்சி ஆணையாளர் பொது சுற்றுநிருபம் இல 2016/3 இன் அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட கேள்விமனுக்கோரல் இடம்பெறும் என அறியத்தரப்படுகிறது.
03. உப அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்விப்படிவ கட்டணத்தையும் வைப்புப்பணத்தினையும் செலுத்தி 01.06.2022 திகதி தொடக்கம் 15.06.2022 ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
04. உரிய கேள்விப் படிவங்களை பூர்த்தி செய்து 20.06.2022ம் திகதி மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கத்தக்கதாக “தலைவர், கொட்டகலை பிரதேச சபை, கொட்டகலை” என முகவரியிடப்பட்டு, பதிவுத்தபாலிலோ அல்லது கொட்டகலை பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்க்கப்பட வேண்டும்.
05. கேள்வி சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 30 வருடத்திற்கு வட்டகொடை இல 01, 02 புதிய கட்டிடம் குத்தகைக்கு பெறல் என தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
06. 20.06.2022 திகதி மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் வருகைதருதல் வேண்டும்.
07. மாதாந்தம் செலுத்த வேண்டிய கேள்வித்தொகையினை ஒவ்வொரு மாதத்தின் இறுதி தினத்திற்கு முன்னர் செலுத்தாத பட்சத்தில் நூற்றுக்கு பத்து வீதம் (10%) தண்டப்பணமாக செலுத்த வேண்டும்.
08. ஒரே தடவையில் செலுத்தப்படவேண்டிய பணத்திற்கான ஆகக்குறைந்த ஏல விலையை தீர்மானிக்கும்போது அரச மதிப்பீட்டாளரினால் அல்லது உள்ளூராட்சி சபையின் மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்படும் பெறுமதிக்கமைவாக மாதக் கூலி மதிப்பிடப்பட்டு, அப்பெறுமதி 120ஆல் பெருக்கப்பட்டு வரும் பெறுமதியினை குறைந்தபட்ச ஏலவிலையாகக் கருதி கேள்வி அழைப்பு செய்யப்பட வேண்டும்.
09. தெரிவு செய்யப்பட்ட கேள்வி மனுதாரர், ஒரே தடவையில் செலுத்தப்படவேண்டிய மொத்தத் தொகையை முழுமையாக செலுத்திய பின்பு, கடையறை குத்தகைக்கு கொடுப்பதற்கான குத்தகை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட வேண்டும்.
10. சபை மூலமாக முடிவு செய்யப்பட்டால் ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய பணத்தில் 50% இனை பணமாக அறவிட்டு, மிகுதியை 6 மாதங்களுக்குள் தவணை முறையில் அறவிடலாம். அவ்வாரான சந்தர்ப்பத்தில் மிகுதிப்பணம் அறவிடப்படும்போது, அப்போதைய மத்திய வங்கி வட்டிவீதத்தின்படி வட்டி அறவிடப்படும்.
11. குற்றமிழைத்தவர் அட்டவணையில் உள்ளடங்கியுள்ள எவரேனும் அல்லது அவரின் நேரடி உறவினர் அல்லது பிரதிநிதி எவரேனும் கேள்விகள் விண்ணப்பத்திருந்தால் குறிப்பிட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
12. சகல கேள்விப் படிவங்களையும் ஏற்றுக்கொள்ள கூடிய அல்லது நிராகரிக்கப்படும் உரிமை கேள்வி சபையை சார்ந்ததாகும். முறைபாடுகள் இருப்பின் அதனை கடிதம் மூலம் கேள்வி சபைக்கு சமர்ப்பிக்கவும்.
13. கேள்வி விண்ணப்பம் பெற்றுக்கொள்ள தங்களின் தேசிய அடையாள அட்டையை சமர்பிக்க வேண்டும்.
14. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் கேள்வி நடைமுறையை அவமதிக்கும் பட்சத்தில் அவரது வைப்புப்பணம் சபைக்கு உரித்தாகுவதுடன் கேள்வி சம்பந்தமாக குற்றமிழைத்தவராக கருதி அவரது பெயர் குற்றமிழைத்தோர் பட்டியலில் சேர்க்கப்படும்.
15. கேள்விகள் மூலமாக தாங்கள் பெற்றுக்கொள்ளும் வட்டகொடை இல 01, 02 புதிய கட்டிடம் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விடமுடியாது. அவ்வாறு குத்தகைக்கு விடப்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டு குறிப்பிட்ட குத்தகை வியாபாரத்தை சபை பொறுப்பேற்கும்.
16. கடையினை பொறுப்பேற்றவரே நீர் இணைப்பு, மின் இணைப்பு என்பவற்றினை பெற்றுக்கொள்ள வேண்டும்
17. நீர்க்கட்டணமும் மின்சார கட்டணமும் கேள்விதாரரினால் செலுத்தப்பட வேண்டும்.

**உப அட்டவணை**

**வட்டகொடை இல 01, 02 புதிய கட்டிடம் குத்தகை காலம் 30 வருடம்**

| இல | இடம் | கேள்வி விபரம் | மீளளிக்கபடும் கேள்வி வைப்புத் தொகை ரூ. | கேள்விப்பத்திர கட்டணம் ரூ. | 30 வருடத்திற்கு குறைந்த கேள்வி ரூ |
|---|---|---|---|---|---|
| 01 | வட்டகொடை | இல 01 புதிய கட்டிடம் (சில்லறை வியாபாரம்) | 10,000.00 | 1,000.00 | 600,000.00 |
| | | இல 02 புதிய கட்டிடம் (சில்லறை வியாபாரம்) | 10,000.00 | 1,000.00 | 600,000.00 |

**ராஜமணி பிரசாந்த்**
**தலைவர்**
**கொட்டகலை பிரதேச சபை**
**25.05.2022**

# O/L பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இலவச பஸ் சேவை

**வெலிகம தினகரன் நிருபர்**

இம்முறை க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் வசதிகருதி தூர இடங்களுக்குச் செல்லும் மாணவர்களுக்கு இலவச பஸ் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வெலிகமயிலிருந்து காலிக்குச் சென்று பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கே இவ்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 6.15 மணிக்கு வெலிகம நகரிலிருந்து இப்பஸ் வண்டி பயணத்தை ஆரம்பிக்கின்றது. மேலும் அஹங்கம, ஹபராதுவ பகுதிகளிலிருந்தும் பஸ் வண்டிகள் இலவசமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலையில் இவ்வாறான வசதிகளை மாணவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளமையை பெற்றோர்களும் பொதுமக்களும் பாராட்டியுள்ளனர்.

# தொழில் முயற்சியாளர்களுக்கு தொடர் பயிற்சி நிகழ்வுகள்

**திறப்பனை தினகரன் நிருபர்**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் ULID இணைந்து தொழில் முயற்சியாளர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சிகளை தற்சமயம் நடாத்தி வருகின்றன. இந்த பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பான மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டம் அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் டபிள்யூ.ஏ. வசந்தவின் அறிவுறுத்தலின் பேரில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி பணிப்பாளர் எம்.ஜி.எஸ்.எஸ். கித்சிறி மற்றும் ஹர்ஷ டி அல்விஸ், தொழில் முனைவோர் அபிவிருத்தி பணிப்பாளர், ULID ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது இது அனைவருக்கும் மிகவும் கடினமான நேரம், ஆனால் சவால்களை சமாளிக்க வேண்டும். என சமுர்த்தி மாவட்ட உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எம். மஹிந்த விரக்கோன் இதன்போது தெரிவித்தார்.

இந்தப் பயிற்சித் திட்டங்கள் அனைத்தையும் குறித்த நேரத்தில் முடிக்கத் தேவையான ஆதரவை வழங்குமாறு திட்ட மேலாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

இதற்காக அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியவாறு தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்தும் மூன்று பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 5 நாட்கள் கொண்ட 40 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 7 பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன.

# பொஸன் பண்டிகை தொடர்பான கலந்துரையாடல்

**திறப்பனை தினகரன் நிருபர்**

பொஸன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இன்று 25ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பொஸன் பண்டிகை தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி நாயக்க தேரர் தலைமையில் அநுராதபுரம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருடம் பொஸன் பண்டிகையை எவ்வாறு கொண்டு நடாத்துவது என்பது தொடர்பான சகல விபரங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காகவே அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இக் கூட்டத்தில் சமய தலைவர்கள் உட்பட பொஸன் விழா ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது பொஸன் விழா பற்றிய முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் நிரப்பு நிலைய தாக்குதலில் ஒருவர் காயம்

**அக்குறணை குறூப் நிருபர்**

நாவலப்பிட்டிய நகரத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்கப்பட்ட முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் கண்டி தேசிய வைத்திய சாலயில் (23) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

22ம் திகதி இரவு நீண்ட நேரம் காத்திருந்து எரிபொருள் பெற வந்த முச்சக்கர வண்டிச் சாரதிக்கு எரிபொருள் கிடைக்காத காரணத்தால் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் மற்றும் பணி புரியும் ஊழியர்கள் மேற்படி சாரதிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் பின்னர் தாக்குதலாக மாறியுள்ளது. மயக்கமடைந்த நிலையில் கீழே வீழ்திருந்த சாரதி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் கண்டி தேசிய வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# DFCC வங்கியின் சில கிளைகள் இடமாற்றம்







அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, அளுத்கம, காத்தான்குடி, அக்கரைப் பற்று, நுகேகொடை மற்றும் நாவுலவில் மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்காக அங்கே தனது கிளைகளை இடமாற்றம் செய்துள்ளது. புதிதாக இட மாற்றம் செய்யப்பட்ட கிளைகள் முறையே அந்தந்த கிளைகளின் நீண்டகால வாடிக் கையாளர்கள், DFCC வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் பணியா ளர்களின் பங்களிப்புடன் திறந்து வைக்கப் பட்டுள்ளன.

இதன்படி, DFCC அளுத்கம கிளையா னது தற்போது இல. 39/A, வெலிபென்ன வீதி, அளுத்கம என்ற முகவரியிலும், DFCC காத்தான்குடி கிளையானது இல. 97, புதிய கல்முனை வீதி, ஆரையம்பதி என்ற முக வரியிலும் மற்றும் DFCC அக்கரைப்பற்று கிளையானது தொகுதி 02, MBS கட்டடம், அம்பாறை வீதி, அக்கரைப்பற்று என்ற முக வரியிலும் அமைந்துள்ளன. DFCC வங்கி யின் நுகேகொடை கிளை தற்போது இல. 24, நாவல வீதி, நுகேகொடை என்ற முகவ ரியிலும், DFCC வங்கியின் நாவுல கிளையா னது இல. 137, குருநாகல் தம்புள்ளை வீதி, நாவுல என்ற முகவரியிலும் அமைந்துள் ளன.


**சொரணதொட்ட பிரதேச சபை**

**2023 வரவு செலவுதிட்ட தயாரிப்புடன் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்**

சொரணதொட்ட பிரதேச சபை வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல், 2023 ஆண்டுடன் சம்பந்தப்பட்டதாக மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ளதால் அதற்காக உங்களது ஆலோசனைகள் இருப்பின் 2022.07.30ம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அழைப்பு விடுக்கின்றேன்.

ஆலோசனைகளை அனுப்ப வேண்டிய முகவரி -

**தலைவர்**
**சொரணதொட்ட பிரதேச சபை**
**துங்ஹிந்த, சொரணதொட்ட, பதுளை**

**டி.எம். நதீகா பிரிசாந்தி திஸாநாயக்க**
**தலைவர்**
**சொரணதொட்ட பிரதேச சபை**
**20.05.2022**

## மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகளின் ஏலவிற்பனை

மக்கள் வங்கியின் முகவர்களான வ/ப இம்புல்பே ப.நோ.கூ. ச. சங்கத்தின் பின்வரும் கிராமிய வங்கிகளில் 2018.05.01 முதல் 2021.04.30 வரை அடகு வைத்து 2022.05.20 வரை மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகள், சங்கத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் 2022.07.02 அன்று மு.ப. 9.00 முதல் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. உடகம கிராமிய வங்கி
2. எல்லெஅராவ கிராமிய வங்கி
3. பெலிஹுல்ஓய கிராமிய வங்கி
4. இம்புல்பே கிராமிய வங்கி
5. ஹதரபாகே கிராமிய வங்கி
6. மொரஹெல கிராமிய வங்கி
7. பம்பகொள்ள கிராமிய வங்கி
8. பஸ்ஸரமுல்ல கிராமிய வங்கி

**பொது முகாமையாளர்**
**வ/ப இம்புல்பே ப.நோ.கூ.ச. சங்கம்**
**எல்லெஅராவ,**
**பலாங்கொட.**

நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 01 | அம்பத்தலை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள பம்பிகளுக்கு பெயாரிங்குகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RPC/WP/G/AMB/M&E/O&M/2022/09R** | 4,000/- + VAT | ரூபா 40,000/- | தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து | 4.0 மில்லியன் | பிஔநி (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532, Fax:0112549199 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 02 | வல்வெல்ல நீர் வழங்கல் திட்டத்திற்கு குளோரின் கேஸ் நடுநிலைப்படுத்தல் முறைமை மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : **RSC (S)/P&C/S/NEUTRALIZATION SYSTEM/ WAKWELLA/RH/2022-05** | 12,500/- + VAT ** | ரூபா 140,000/- | குளோரின் கேஸ் நடுநிலைப்படுத்தல் முறைமை உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 11.11 மில்லியன் | பிஔநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 03 | வக்வெல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு கேஸ் குளோரினேட்டர்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : **RSC (S)/P&C/S/CHLORINATION SYSTEM/WAKWELLA/ RH/2022-10** | 4,000/- + VAT | ரூபா 50,000/- | குளோரின் கேஸ் நடுநிலைப்படுத்தல் முறைமை மற்றும் துணைப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 4.97 மில்லியன் | பிஔநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 04 | பத்தேகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு கேஸ் குளோரினேட்டர்கள், பூஸ்டர் பம்பிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : **RSC (S)/P&C/S/CHLORINATION SYSTEM/BADDEGAMA/ RH/2022-08** | 6,000/- + VAT ** | ரூபா 120,000/- | கேஸ் குளோரினேட்டர் பூஸ்டர் பம்பிகள் மற்றும் துணைப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 8.51 மில்லியன் | பிஔநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 05 | காலி பிராந்தியத்திலுள்ள ஹபராதுவ நீர் வழங்கல் திட்டத்தின் பொனவிஸ்டகந்த பம்பி நிலையத்திற்கு Vertically Mounted Inline பூஸ்டர் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்.<br>ஒப்பந்த இல : **RSC(S)/P&C/BOOSTER PUMPS/BONAVISTAKANDA/ RH/2022-07** | 6,000/- + VAT ** | ரூபா 85,000/- | Vertically Mounted Inline பூஸ்டர் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 5.995 மில்லியன் | பிஔநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 15/06/2022 பி.ப. 2.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 06 | மாத்தறையிலுள்ள பிபொமு அலுவலக் கட்டிடத்துடன் கூடிய இடப்பரப்பிற்கு ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்குதல்<br>ஒப்பந்த இல : **RSC(S)/P&C/J/DGM OFFICE /MATARA/O&M/2022-64** | 4,000/- + VAT | ரூபா 31,500/- | ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் ஜெனிட்டோரியல் சேவை வழங்குநர்கள் | 3.16 மில்லியன் | பிஔநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105, Fax 0412221329 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 07 | கந்தான நீர் வழங்கல் திட்டம் மற்றும் எல்லகந்த நீர்த்தேக்க வளவுகளுக்கான சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : **RPC/WP/S/KAN/CIVIL/O&M/2022/05** | 12,500/- + VAT ** | ரூபா 135,000/- | இதனையொத்த ஒப்பந்தங்களில் அனுபவமுள்ள நிறுவனங்கள் | 13.5 மில்லியன் | பிஔநி (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532, Fax:0112549199 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-08ஆம் திகதி மு.ப. 09.30 மணிக்கு ஹொரண, கந்தனகம, கந்தன நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் இடம்பெறும். | 15/06/2022 பி.ப. 2.00 |
| 08 | குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்திலுள்ள பலகொல்ல நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி மற்றும் வளவுகளுக்கு சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම(ම)/ම.නැ/සේවා/කිහාන/කුණ්ඩසාලේ/2022/44 | 6,000/- + VAT ** | ரூபா 74,000./- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பிஔநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை (மத்திய கிழக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 08/06/2022 பி.ப. 2.00 |
| 09 | குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்திலுள்ள அகஸ்பொக்குண பம்பி நிலையம் மற்றும் திகன 1ஆம் வலயத்தின் பாவனையாளர் சேவை நிலையத்திற்கான பராமரிப்பு வேலைகள்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම(ම)/ම.නැ/සේවා/කිහාන/කුණ්ඩසාලේ/2022/37 | 6,000/- + VAT ** | ரூபா 76,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பிஔநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை (மத்திய கிழக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 08/06/2022 பி.ப. 2.00 |
| 10 | மெததும்பர நீர் வழங்கல் திட்டத்தின் அலுவலக வளவு மற்றும் கொட்டகம உள்ளீர்ப்பின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම(ම)/ම.නැ/සේවා/කිහාන/මැදදුම්බර/2022/20 | 6,000/- + VAT ** | ரூபா 68,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பிஔநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை (மத்திய கிழக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 08/06/2022 பி.ப. 2.00 |
| 11 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு மேற்கு) - சிலாபம், பிங்கிரிய, காக்காப்பள்ளிய, நெலும்பொக்குண, தங்கொட்டுவ மற்றும் நாத்தாண்டியவிலுள்ள பொறுப்பதிகாரி அலுவலக வளவுகள் மற்றும் கட்டிடங்களின் சுத்திகரிப்பிற்கான ஜெனிட்டோரியல் சேவைகள்<br>ஒப்பந்த இல : **RSC(NW)/M(O&M)-PUT/SER/O&M/ CHILAW/2022/14** | 12,500/- + VAT ** | ரூபா 228,000/- | பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு சகிதம் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்துகொண்டுள்ள நிறுவனங்கள் | 22.7 மில்லியன் | பிஔநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2221161 Fax : 037-2230086 | 15/06/2022 பி.ப. 2.00 |
| | **வாகனம் வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 12 | மேற்கு உற்பத்தி பிராந்தியத்திற்கு வாகனங்களை (க்றூ கெப் / டபள் கெப் / வேன்) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RPC/WP/S/WPR/M&E/O&M/2022/03** | 6,000/- + VAT ** | ஒரு வாகனத்திற்கு ரூபா 21,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஔநி (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532, Fax:0112549199 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 13 | (மேற்கு - தெற்கு) உதவிப் பொது முகாமையாளருக்கு மோட்டார் கார் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **W-S/P&C/H(01)/DGM/O&M/2022/31R-01** | 2,000/- + VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 5,000/- | இயைபுடைய வாகன உரிமையாளர்கள் | | பிஔநி (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 09/06/2022 மு.ப. 10.00 |
| 14 | பொறுப்பதிகார் (பேருவளை) அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **W-S/P&C/H(10)/ DGM/O&M/ 2021/91R-01** | 2,000/- + VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 5,000/- | இயைபுடைய வாகன உரிமையாளர்கள் | | பிஔநி (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 09/06/2022 மு.ப. 10.00 |
| 15 | பிரதேச பொறியியலாளர் (பண்டாரகம) அலுவலகத்திற்கு வேன் ஒன்றை (Dual A/C) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : W-S/P&C/H(02)/ DGM/O&M/2022/34R-01 | 2,000/- + VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 5,000/- | இயைபுடைய வாகன உரிமையாளர்கள் | | பிஔநி (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 09/06/2022 மு.ப. 10.00 |
| 16 | அக்மீமன நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RSC(S)/P&C/HIRING/CRE CAB/AKMEEMANA/ O&M/2022-63** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஔநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 15/06/2022 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**Procurement for the supply of 5,000 Nos. Less High Concrete Sleepers to Nanu Oya Yard and 5,000 Nos. Less High Concrete Sleepers to Ambewela Yard to suit EN 45 E 1 Rails for check railed track in Upper District – Sri Lanka Railways - Procurement No.: SRS/F.7832**

1. இலங்கை புகையிரத சேவைகளின் மேல் மாவட்டத்தில் Check Railed Track இற்காக EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான, நானு ஓய திறந்த வெளிக்கு 5,000 எண்ணிக்கையான Less High Concrete Sleepers மற்றும் அம்பேவெல திறந்த வெளிக்கு 5,000 எண்ணிக்கையான Less High Concrete Sleepers ஆகியவற்றை வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று 2022.05.25 ஆம் திகதியிலிருந்து 2022.06.20 ஆம் திகதி வரையும் வார நாட்களில் (வேலை நாட்களில்) மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
**புகையிரத பெறுகை உப-திணைக்களம்,**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.**
**தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818**
**தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044**

**மின்னஞ்சல் : srs.sir@gmail.com**
**இணையதளம் : www.railway.gov.lk**

4. கடந்த (05) ஐந்து வருடங்களில் விலைமனுதாரர் 50 மில்லியன் ரூபா பெறுமதியானதும் 5,000 எண்ணிக்கையானதுமான கொன்கிறீட் சிலீப்பர்களை அல்லது முன்-அழுத்தப்பட்ட கொன்கிறீட் பீம்களை (Pre-stressed concrete beams) அல்லது 500 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள முன்-அழுத்தப்பட்ட கொன்கிறீட் தூண்களை (Pre-stressed concrete poles) வழங்கியிருப்பதுடன் அவற்றிற்கான விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2022.05.25 ஆம் திகதியிலிருந்து 2022.06.20 ஆம் திகதி வரையும் பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 27,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, புகையிரத பெறுகை உப-திணைக்கள அலுவலக முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 1,500,000.00 ரூபா என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதான நிபந்தனையற்ற பிணை உத்தரவாதமுள்ள விலைமனுப்பிணையாகவும் இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2022.06.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**புகையிரத பெறுகை உப-திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10.**
**குறிப்பீட்டு இல.: SRS/F.7832**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

# மத்திய சுற்றாடல் அதிகார சபை

## இறுதி தீர்மான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

## உத்தேசிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை உப மின்கடத்தும் நிலையத்திலிருந்து மாத்தறை உப மின்கடத்தும் நிலையம் வரையான 123கி. வ மின் கடத்தும் கம்பி செயற்றிட்டத்திற்கான

**ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப.) அறிக்கை**

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை பிற்சேர்க்கை (ஆ.சு.ப.) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 22 நவம்பர் 2000ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக இல. 385, 4ம் மாடி, லான்டமார்க் பில்டிங், காலி வீதி, கொழும்பு-03 என்னும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபைக்கு மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆ.சு.ப. அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**'பரிசரபியச'**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை**

# புத்தளம் நகர சபை

**2020 ஒக்டோபர் மாதம் 29ம் திகதி அன்று வடமேல் மாகாண ஆளுநரினால் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான நகர சபை வரவு செலவு திட்டத்தின் அமுலாக்க விதிகளுக்கு அமைய வெளியிடப்பட்ட அறிவித்தல்.**

புத்தளம் நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்திற்கான பொது கலந்தாய்வு 2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் திகதி வரை நடைபெறவுள்ளதால், 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்திற்கான உங்களின் ஆலோசனைகளை 2022 ஜுன் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் புத்தளம் நகர சபைக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**எம்.எஸ்.எம்.ரபீக்**
**தலைவர்,**
**புத்தளம் நகர சபை**

**தொலைபேசி இல : 032 22 65 275**
**தொலைநகல் : 032 22 66 786**
**மின்னஞ்சல் : ducputt@gmail.com**

**பெயர் மாற்றம்**

நௌபர்டீன் பாத்திமா ச:.ப்னா ஆகிய நான் இஸ்லாமிய மதத்திலிருந்து சைவ சமயத்தை தழுவி நௌபர்டீன் ஸ்வப்னா என பெயர், மதம் மாறுவதாக அறியத்தருகிறேன்.

# பெறுகை அறிவித்தல்

## டீ சொய்சா மகளீர் வைத்தியசாலை

## கொழும்பு - 08

அரச மானிய உதவித்திட்டத்தின் பிரகாரம் டீ சொய்சா மகளீர் வைத்தியசாலையின் பின்வரும் கருமத்தை மேற்கொள்வதற்காக இலங்கை நிர்மாணிப்பு மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.05.25 முதல் 2022.06.08 அன்று மு.ப.10.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2022.05.25 முதல் 2022.06.07 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கிடைப்பட்ட காலப்பிரிவில் டீ சொய்சா மகளீர் வைத்தியசாலையின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத ரூபா 2500.00 இற்கான தொகையை செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை தாபனப்பிரிவில் சமர்ப்பித்து இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிழைகளின்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் இரண்டு பிரதிகளாக, "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" எனக் குறிப்பிட்டு, முத்திரையிடப்பட்ட இரு உறைகளில சேர்த்து, தம் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் பதிவுத்தபாலில் விலைமனுத் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் "தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, டீ சொய்சா மகளீர் வைத்தியசாலை, கொழும்பு -08" என்ற முகவரிக்கு அனுப்புதல் அல்லது கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், பெறுகையின் பெயர், குறிப்பிடப்படல் வேண்டும். 2022.06.08 அன்று மு.ப.10.00 இற்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பதாரர்கள் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

| இலக்கம் | பெறுகை இலக்கம் | பெறுகையின் பெயர் | தரம் | உத்தேச தொகை ரூபா | விலைமனுப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | DMH/AB/D.S/ XII/2021 | ஔடதக் களஞ்சிய சாலையின் கூரையின் திருத்த வேலைகள் | C8 அல்லது அதற்கு மேல் | 4,895,775.75 | 75,000.00 |

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களின் செல்லுபடிக்காலம் 91 நாட்களாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களிற்காக அலுவலகத்தை அழைக்கவும் (தொ.பே.இல. 011-2662619-23 நீடிப்பு 400) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்தியப் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**டீ சொய்சா மகளீர் வைத்தியசாலை**
**கொழும்பு - 08.**

# விலை மனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB)

# 2268 எண்ணிக்கையில் தீயணைப்பு கருவிகளை வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனு

## (SLTB/TS/GEN/2022/32)

1. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் 2022.06.16 மு.ப. 10.30 வரை தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக 2268 எண்ணிக்கையில் தீயணைப்பு கருவிகளை வழங்கி விநியோகிப்பதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து, பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இ.போ.ச பாரிய பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு - 05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைப் பிரிவு, செயலாளர் இடம் காணப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மு.ப. 9.00 - பி.ப. 03.00 மணிக்கிடையில் வேலை நாட்களில் ஓர் மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 10,000/- செலுத்துவதன் பேரில் 2022.05.05 முதல் 2022.06.15 வரை விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

| விபரம் | விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|
| கீழே விபரிக்கப்படுமாறு 2268 தீயணைப்பு கருவிகளை வழங்கி விநியோகித்தல்<br>101 nos. 100 L Foam Fire Extinguishers<br>378 nos. 09 L Foam Fire Extinguishers<br>704 nos. 09 L Air Pressurized Water Fire Extinguishers<br>470 nos. 02 Kg. Carbon Dioxide Fire Extinguishers<br>215 nos. 03 Kg Carbon Dioxide Fire Extinguishers<br>399 nos. 06 Kg. ABC Dry Powder Fire Extinguishers<br>01 no. 25 Kg. ABC Dry Powder Fire Extinguishers | 300,000.00 |

2. தீயணைப்பு சேவைத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் ஓர் தீயணைப்பு உபகரணங்களை வழங்குநரால் தற்போதைய செல்லுபடியாகும் சான்றிதழைக் கொண்டுள்ள பதிவு செய்யப்பட்ட வர்த்தக பதிவைக் கொண்டுள்ள மற்றும் - தீயணைப்பு உபகரண வழங்குநராக குறைந்தபட்சம் 10 வருட அனுபவத்தை கொண்டுள்ளவர்கள் விலைமனுவிற்கு தகைமையுடையோர் ஆவர்.
3. விலைமனுக்கள் 2022.09.17ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
4. இபோச வினால் முதல் எழுத்துமூல வேண்டுதலின் பேரில், மாற்றமுடியாத மற்றும் நிபந்தனையற்ற கோரப்படும் போது வழங்கக்கூடிய மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வழங்கப்படும் மேலே குறிப்பிடும் பெறுமதிக்கு 2022.10.17 வரை செல்லுபடியாகும் ஒரு விலைமனுப்பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். மேலே குறிப்பிடுமாறு ஓர் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை இணைக்கப்படாத எந்த விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
5. விலைமனு ஆவணத்தின் எல்லாப் பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது முத்திரை இடப்படல் வேண்டும்.
6. (அ) விலைமனு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் 1987ஆம் ஆண்டின் ஒப்பந்த இல 3 இன் விதிகளின் கீழ் கொழும்பு - 10, D.R விஜேவர்தன மாவத்த, 'சமாகம் மெதுர' பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் கீழ் ஓர் விலைமனுதாரரின் சார்பாக அல்லது முகவராக செயற்படும் எந்த நபர், உதவி முகவர், பிரதிநிதிப்படுத்துபவர் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர். சான்றிதழின் மூலம் பிரதியை சமர்ப்பிக்க தவறும் விலைமனுதாரரின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் இல-03 விதிகளின் கீழ் பெறுகை வழங்கப்படுவதற்கு முன் மற்றும் விலைமனு சமர்ப்பித்த பின்னர் உடனடியாக தாமாகவே விலைமனுதாரர்களும் பதிவு செய்யப்படுவர் சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத எந்த விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்படமாட்டாது.
7. இந்த அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் விலைமனுக்கள் வைப்பிலிடப்படல் வேண்டும். அல்லது நகல்களுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 2268 எண்ணிக்கையில் தீயணைப்பு கருவிகளை ரெக்சீனை வழங்கி விநியோகித்தலுக்கான விலைமனு' என்று குறிப்பிடப்பட்டு, வெவ்வேறு இரண்டு கடித உறைகளில் 'மூலப் பிரதி' மற்றும் 'நகல் பிரதி' யை உள்ளடக்கி பொறியிடப்பட்ட உறைகளில் இடப்படல் வேண்டும்.
8. 2022.06.16ம் திகதி மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் மூடப்படும் மற்றும் விலைமனுக்கள் கொழும்பு-05, கிருல வீதி, 200, இலங்கைப் போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக்குழு,**
**இலங்கை போக்குவரத்துச் சபை,**
**இல-200, கிருல வீதி, கொழும்பு-05**

விசாரணைகள், செயலாளர், பெறுகைக் குழு
தொ.பே - 0117706110, 0771056110
தொ.பே/ பெக்ஸ்: 0112588457

**அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம்**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**(கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு)**

1971 - 2021 50th Anniversary

# பெறுகை அறிவித்தல்

## பாவிக்கப்பட்ட வாகனங்கள், பொறித்தொகுதி, இயந்திராதி, கருவிகள் மற்றும் அசையாத உதிரிப்பாகங்கள்

இரத்மலான, 7 ஆம் இலக்கத்தின் பொறுபண பாதை அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபன இடப்பரப்பு, மஹியங்கஹய வேரகன்தொட்ட கொன்கிறீட் திறந்தவெளி மற்றும் பன்னலுக்கு அருகாமையிலுள்ள போபிட்டிய கொன்கிறீட் திறந்தவெளி மற்றும் மதவச்சி கொங்கிறீட் திறந்த வெளியிலுள்ள பின்வரும் பாவிக்கப்பட்ட உருப்படிகளின் விற்பனைக்காக அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபன, கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

**"Construction Machines & Vehicles, Concrete Mixers, Dozers, Water Pumps, Porker Vibrators, Lighting & Welding plants, Hardware items, Tools, Spare Parts, Aluminum Bars, Battery, Tyres, Scrap iron, Furniture, Concrete Products & other Unserviceable Items"**

3,000 ரூபா + பெசேவ அடங்கலான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், இரத்மலான, பொறுபண பாதை, 7 ஆம் இலக்கத்திலுள்ள அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபன வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் உரித்தான தளங்களில் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

கேள்விகள் தலைவர், கூட்டுத்தாபன பெறுகைக் குழு, அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம், இல. 7, பொறுபண பாதை, இரத்மலான என முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்டு, பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"TENDER FOR THE SALE OF USED VEHICLES, MACHINERY & MATERIALS** என குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் 2022.06.15 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் வழங்கப்படும்.

இரத்மலான, பொறுபண பாதை, 7 ஆம் இலக்கத்திலுள்ள அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்தில் 2022.06.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே அதே இடத்தில் திறக்கப்படும். தாமதமான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட விலைமனு பிணையமொன்றை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும் அல்லது ஒவ்வொரு முன்வைப்புடனும் ஒவ்வொரு உருப்படியின் பெறுமதியின் 2% இற்கு நிகரான வீதத்தில் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக விபரங்களையும் இரத்மலான, பொறுபண பாதை, 7 ஆம் இலக்கத்திலுள்ள அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபன வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைபேசி இல.: 2632146/2607560/27607566.**

**தலைவர்,**
**கூட்டுத்தாபன பெறுகைக் குழு,**
**அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனம்.**
**இல. 7, பொறுபண பாதை,**
**இரத்மலான.**

**''உட்கட்டமைப்பு நிர்மாண முன்னோடிகள்''**

மாநகரசபை - குருணாகல்

## அறிவித்தல்

**குருநாகல் மாநகர சபை குடியிருப்பாளர்களிடமிருந்து 2023 வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்குவதற்கான முன்மொழிவு கோரல் அறிவிப்பு.**

2023 ஆம் ஆண்டுக்கான குருநாகல் மாநகர சபையினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கான மூலதனச் செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்குவதற்காக மாநகர சபைகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து யோசனைகள் மற்றும் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. **2022.06.30** ஆம் திகதிக்கு முன், **நகராட்சி ஆணையாளர், மாநகர சபை, குருநாகல்** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்பட வேண்டும் மேலும் முன்மொழிவுகள் இடப்பட்ட உறையின் இடது மேல் மூலையில் **"2023 வரவு செலவு திட்டத்திற்கான முன்மொழிவு"** எனக் குறிப்பிட்டு அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

துஷார சஞ்ஜீவ விதாரண
நகராட்சி ஆணையாளர்,
குருணாகல் மாநகரசபை அலுவலகம்
2022.05.25

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## பெறுகை அறிவித்தல்

சூழல் அமைச்சு

### இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

**2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் பதவிநிலை அலுவலர்களுக்கான சீருடைகள்/ சீருடைப் பொருட்களின் வழங்கல்**

**விலைமனு இல.: LMSL/SUP/DPC/08/2022**

அ) இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் உற்பத்தியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து பின்வரும் அம்சங்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**அட்டவணை இல.: 01**

| அம்ச இல. | அம்ச விளக்கம் | தேவைப்படும் அளவு | கேள்வி இலக்கம் | விலைமனு உத்தரவாத பெறுமதி (மீளளிக்கப்படும் வைப்புத் தொகை) (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 01. | TROUSER MATERIAL FOR OFFICE STAFF – Black (Note 1) | 2067 Mtrs .(4.2mtrs X 490 pcs.& 4.5 mtrs X 2 pcs) | LMSL/SUP/ DPC/08/2022/01 | 15,000/- |
| 02. | READY MADE SHIRTS FOR OFFICE STAFF SHORT/ LONGS SLEEVE. Size will be notified in due course (Sizes range 14-17 ½) | 846 Nos. | LMSL/SUP/ DPC/08/2022/02 | 10,000/- |
| 03. | SHIRT MATERIAL FOR SECURITY STAFF – Light Blue (Note 2) | 283 Mtrs (6 mtrs X 46 pcs & 7 mtrs X 1 pcs) | LMSL/SUP/ DPC/08/2022/03 | 2,000/- |
| 04. | TROUSER MATERIAL FOR SECURITY STAFF – Dark Blue (Note 3) | 198 Mtrs (4.2mtrs X 43Pcs & 4.5 mtrs X 3 pcs) | LMSL/SUP/ DPC/08/2022/04 | 3,000/- |
| 05. | OVERALL MATERIAL FOR WELDERS – Blue (Note 4) | 105.6 Mtrs (9.6 mtrs X 11 pcs) | LMSL/SUP/ DPC/08/2022/05 | 1,000/- |
| 06. | T-SHIRTS FOR STAFF (LADIES/ GENTS) | LADIES – 168 Nos. GENTS – 2082 Nos. | LMSL/SUP/ DPC/08/2022/06 | 20,000/- |
| 07. | SHOES FOR GENTS –<br>1. Black Leather Shoes – Office Staff.<br>2.Security Leather Shoes<br>3.Working Boots<br>Low-cut<br>Anchor type<br>4. Canvas | <br>172 pairs<br>35 pairs<br><br>313 Pairs<br>11 Pairs<br>61 Pairs | LMSL/SUP/ DPC/08/2022/7 | <br>10,000/-<br><br>10,000/-<br><br><br>2,500/- |
| 08. | SHIRT MATERIALS FOR DRIVERS – White (Note 5 ) | 144.75 mtrs (5.5 mtrs X 12 pcs & 5.25 mtrs X 15 pcs) | LMSL/SUP/ DPC/08/2022/08 | 1,000/- |
| 09 | CAPS | 573 Nos. | LMSL/SUP/ DPC/08/2022/09 | 2,000/- |
| 10. | SOCKS (Must be 100% cotton) | 1080 Pairs | LMSL/SUP/ DPC/08/2022/10 | 2,000/- |
| 11. | Sarees with Blouse Pieces (7 mtrs – 1 No.) | 268 Nos. | LMSL/SUP/ DPC/08/2022/11 | 10,000/- |
| 12. | Lining Material for Blue (Note 6) | 268 Mtrs (1mtr X 268 pcs) | LMSL/SUP/ DPC/08/2022/12 | |

**Note.1. To be cut and packed in to 4.2 Mtrs x 490 and 4.5 Mtrs x 2 when delivering**
**Note.2. To be cut and packed in to 6 Mtrs x 46 and 7 mtrs x 1 when delivering**
**Note.3. To be cut and packed in to 4.2 Mtrs x 43 and 4.5 Mtrs x 3 when delivering**
**Note.4. To be cut and packed in to 9.6 Mtrs x 1 1 when delivering**
**Note.5. To be cut and packed in to 5.5 Mtrs x 12 and 5.25 Mtrs x 15 when delivering**
**Note.6. To be cut and packed in to 1 Mtr x 268 when delivering.**

ஆ) விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

இ) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே முகவரியில் 2022.05.25 ஆம் திகதியிலிருந்து 2022.06.15 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். தொடர்பெண்கள் பின்வருமாறு: 011-2883972 (நேரடியானது) அல்லது 011-2883951/2 நீடிப்பு. 205.

ஈ) 2022.05.25 ஆம் திகதியிலிருந்து 2022.06.15 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் ரூபாவை (2000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் வழங்கல் முகாமையாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெற்றுக் கொள்ளலாம்.

உ) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரியை 2022.06.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

(ஊ) விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்வதற்காக இறுதி திகதியிலிருந்து அல்லது ஏதாவது நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

எ) அனைத்து விலைமனுக்களும் பின்வரும் பாங்கிலமைந்த விலைமனுப்பிணையுடன் அமைந்திருத்தல் வேண்டும்.

ஏ) விலைமனுக்கோரல் ஆவணத்தின் (விலைமனுப் பிணைக்கான உருமாதிரி) 111 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில்.
- இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் தலைவரின் பெயரில்.
- 01 ஆம் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணை.
- விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்வதற்காக இறுதி திகதியிலிருந்து அல்லது ஏதாவது நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையில்.

ஐ) எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரிப்பதில் அல்லது சமர்ப்பிப்பதில் ஏற்படும் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் எந்தவொரு செலவினங்களையும் மீளளிப்பதற்கான கடப்பாட்டையும் கொண்டிராது. இது தொடர்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

ஒ) சித்திகரமான விலைமனுதாரர் கொள்வனவு கட்டளைகளின் 10% பெறுமதிக்கான செயற்பாட்டு உத்தரவாமொன்றை வழங்கல் வேண்டும். ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செயற்பாட்டு உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலம் அமைந்திருத்தல் வேண்டும்.

ஓ) இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் வழங்குநர்கள் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரி(மாதிரிகள்)ஆகியவற்றிற்கு ஒத்திசைவான உற்பத்தி(உற்பத்திகளை) வழங்குமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஔ) வழங்கப்பட்ட எந்தவொரு உற்பத்தி/ உற்பத்திகளும் மாதிரிகளுக்கு ஒத்திசைவாக இல்லாவிடின், அவைகளை நிராகரிக்கப்படுவதுடன் அவைகளுக்கான எந்தவொரு பணமும் செலுத்தப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விலைமனு அழைத்தல்

### மருத்துவம் அல்லாத உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

சுகாதாரம் - சுதேச வைத்தியம், சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை அமைச்சு

**சுகாதார சேவைகள் திணைக்களம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - மாத்தளை**

மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக்குழுத் தலைவரினால், 2022 ஆம் ஆண்டிற்கான மருத்துவமல்லாத உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகத் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

| | Non Medical Equipment | QTY |
|---|---|---|
| **No. 01** | | |
| 01 | Desktop Computer | 06 |
| 02 | Photocopy machine | 03 |
| 03 | Computer - Laptop | 04 |
| 04 | UPS | 10 |
| 05 | Generator | 03 |
| 06 | Stand Fan | 05 |
| 07 | Spot lamp | 01 |
| 08 | Multi media projector | 01 |
| 09 | Multi media screen | 01 |
| 10 | Safety locker | 02 |
| 11 | Boiler 20 L | 02 |
| **No. 02** | | |
| 01 | Office Table 4x2 1/2 | 17 |
| 02 | Office rotating chairs with medium back | 14 |
| 03 | Front glass cupboard & steel cupboard | 09 |
| 04 | Hybrid chair | 30 |
| 05 | Non rotating office chairs without arms | 25 |
| 06 | File cabinet | 07 |
| 07 | Dining table (for 6 chairs) | 02 |
| 08 | Cushion stool | 01 |

01. 2022.05.25 முதல் 2022.06.15 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.03.00 வரை எம்.சீ வீதியிலுள்ள மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையில் இதற்கான விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும்.

02. விலைமனுப்படிவத் தொகுதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, மீளளிக்கப்படாத ரூபா 3000.00 இற்கான தொகையை இவ் அலுவலகத்தின் சிறாப்பருக்கு காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. நீங்கள் சமர்ப்பிக்கும் விலைமனுக்களுடன் மொத்தமான விலைமனுத்தொகையின் 02% இற்கான விலைமனுப்பிணையமொன்று இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாத்தளை என்ற பெயரில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி உரியவாறு பூரணப்படுத்தி, தனித்தனி உறைகளில் சேர்த்து, அவற்றை ஓர் உறையில் சேர்த்து அதன் இடது பக்க மேல் மூலையில் மருத்துவமல்லாத உபகரணங்களை வழங்கல் எனக் குறிப்பிட வேண்டும்.

05. பிழைகளின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2022 ஜீன் 16 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்ததபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக மேற்படி முகவரியின் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாகவே அவை திறக்கப்படும். அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். மேலதிக விபரங்களிற்காக 066-2222326/066-2222734 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்.

06. விலைமனு முன்னோடிச் சந்திப்பு - 2022.06.08 அன்று மு.ப.10.00 இற்கு மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள்,**
**பணிப்பாளர் பணிமனை,**
**மாத்தளை**
**2022.05.25 ஆம் திகதி**

## பெறுகை அறிவித்தல்

**சுகாதார அமைச்சு**

**பொது வைத்தியசாலை - கேகாலை**

01. கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளரினால், கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிட நிர்மாணிப்புகளிற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, 2022.06.16 அன்று மு.ப.10.30 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அன்றையதினம் மு.ப.10.30 இற்கு விலைமனுத்திறக்கப்படும்.

| தொடர் இலக்கம் | I வேலை விபரம் | II உத்தேச செலவினம் ரூபா | III ஆகக் குறைந்த தரம் CIDA | IV விலைமனுப் பிணைத் தொகை ரூபா | V விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா | VI ஒப்பந்த காலம் நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுநீரக சிகிச்சைப் பிரிவின் முதலாம் மாடியை நிர்மாணித்தல் | 9.5 மில் | C07 CIDA | 90,000.00 | 7500.00 | 90 |
| 02 | சிறுநீரக சிகிச்சை பிரிவிற்கு மூன்று வரிசை மின் சக்தியை வழங்கல் | 3 மில் | CIDA EM 04 | 24,000.00 | 1000.00 | 91 |

02. மேற்படி கருமத்திற்காக, நிர்மாணிப்பு அபிவிருத்தி நிறுவனத்தில் (CIDA) மற்றும் தேசிய நிர்மாணிப்பு ஒப்பந்தக்காரர்களின் சங்கத்தில் அங்கத்துவமுள்ள அல்லது அதற்கு நிகரான தகைமைகளை கொண்டுள்ள நிறுவனமொன்றில் மேற்படி அட்டவணையின் (II) ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்காகப் பதிவு செய்யப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் இதற்காகத் தகைமை பெறுவர்.

03. 2022.05.25 முதல் 2022.06.15 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரையான காலப்பகுதியில் அட்டவணையின் (V) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைச் செலுத்தி, கேகாலை பொது வைத்தியசாலையின் தாபனப்பிரிவில் இதற்கான விலைமனுப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04. பூரணப்படுத்தப்பட்ட இரண்டு பிரதிகளுடன் கூடிய விலைமனுக்கள், அரச அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிணையமொன்றுடன், 2022.06.16 அன்று மு.ப.10.30 இற்கு அல்லது அதற்கு முன்னர், கேகாலை பொது வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள, பெறுகைப்பெட்டியிற் சேர்த்தல் அல்லது "பணிப்பாளர், பொது வைத்தியசாலை, கேகாலை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் சேர்த்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில்........ அட்டவணையில் உள்ளவாறு வேலைவிபரம் எனக்குறிப்பிடப்படல் வேண்டும்.

05. இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022.06.09 அன்று மு.ப.10.00 இற்குப் பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறும்.

06. 05 மில்லியன்களிற்கு மேற்பட்ட வேலைகளிற்காக பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் நிறுவனத்தின் (PCA3) சான்றிதழுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இதற்கான மேலதிக விபரங்களை, அலுவலக நேரங்களில், கேகாலை, பொது வைத்தியசாலையின் தாபனப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் - 035-2222261 (நீடிப்பு 330)

08. பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.

**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை,**
**கேகாலை**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran

Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE



# பங்களாதேஷுடனான இரண்டாவது டெஸ்ட்; 222 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இலங்கை





பங்களாதேஷ் அணி பெற்ற ஓட்டங்களை விட இலங்கை அணி 222 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் 143 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்த போது நிறைவுக்கு வந்தது.தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ஓசத பெர்னாண்டோ மற்றும் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன களமிறங்கி நிதானமா ஆடிய வேளையில் ஓசத பெர்ணான்டோ தனது அரைச்சதம் கடந்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.அவர் 57 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் அணியின் தலைவருடன் இணைந்தார் குசல் மென்டிஸ் அவரும் நிதானமாக ஆடுவார் என்ற நிலையில் 11 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்க பின்னர் கசுன் ராஜித அணியின் தலைவருடன் இணைந்தார்.அவரும் அணியின் தலைவர் 70 ஓட்டங்கள் பெற்ற நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது..பங்களாதேஷ் அணியின் சார்பாக சஹிப் அல் ஹசன் ,எபோட் ஹொசையின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையை வீழ்த்தினர்.

இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று பங்களாதேஷ் அணி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து களமிறங்கியது.

அதன்படி, தனது முதல் இன்னிங்சிற்காக பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 365 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பங்களாதேஷ் அணி சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய முஸ்புகுர் ரஹீம் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன் லிட்டன் தாஸ் 141 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் கசுன் ராஜித 5 விக்கெட்களை மற்றும் அசித பெர்ணான்டோ 4 விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர்.

பங்களாதேஷ் அணியின் ஆரம்ப போட்டியார்கள் உட்பட 6 பேர் எவ்வித ஓட்டங்களும் எடுக்காத நிலையில் ஆட்டமிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.இரு அணிகளும் மோதி முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தாஸின் விக்கெட்டைக் கைப்பற்றிய கசுன், மீண்டும் ஒரு டெஸ்ட் போட்டியில் முதல் முறையாக ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி, மொசாடெக் ஹொசைனின் விக்கெட்டை வீழ்த்தினார். 7 ஓவர்கள் மீதமிருக்க 27 ஓவர்களில் 62 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்திய கசுன், பங்களாதேஷுக்கு எதிராக அவர்களது சொந்த மைதானத்தில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையையும் பெற்றார்.

கசுனைத் தவிர மற்ற நான்கு விக்கெட்டுகளையும் வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ 93 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

காலை முதல் வேகப்பந்து வீச்சாளர்கள் பங்களாதேஷ் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களுக்கு ஷோட் போல் உத்தியை பயன்படுத்தினர். ஆனால் முஷ்பிகுர் ரஹிம் 175 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த இன்னிங்ஸ் ரஹீமின் டெஸ்ட் வாழ்க்கையில் ஐந்தாவது முறையாக அவர் 150 ஓட்டங்களைக் கடந்தார். எபோடோத் ஹொசைன் இன்னிங்ஸின் இறுதி துடுப்பாட்ட வீரராக மட்டையை அடிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு நடுவர் பதிலளித்த போதிலும், மேன்முறையீடு செய்யப்பட்டபோது அவர் ஆட்டமிழக்காத வீரராக மீண்டும் பதிவு செய்யப்பட்டார்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 28-05-2022 இல. 09




## அம்பாறை மாவட்டத்திலிருந்து 7 மாணவர்கள் தெரிவு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

புறோ நைட்ஸ் சதுரங்க அகடமியின் 7 செஸ் வீரர்கள் தேசிய மட்ட செஸ் போட்டிக்கு அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை தேசியஇளையோர் சதுரங்க சம்பியன்சிப் போட்டியின் அம்பாறை மாவட்ட மட்டத்திலான 8 வயதிற்குட்பட்ட மற்றும் 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான தெரிவு போட்டிகள் அண்மையில் இடம் பெற்றது.

14 வயதிற்குட்பட்ட திறந்த போட்டியில் ஏ.ஏ.பர்விஸ் சம்பியனாகவும் , ஐ.கே. முஹம்மட் ஆகில் கான் இரண்டாவது இடத்தையும் , எம்.இஸட் .எம்.ஸானிப் மூன்றாம் இடத்தையும் ,எம்.ஜே.ஐ.ஸஹ்மி தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் , 8 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் என்.எம்.பாதிஹ் சம்பியனாகவும் , எம்.ஏ.எம்.மஹ்தி இரண்டாவது இடத்தையும், கே.என்.எஸ்.நஜ்தி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



## நிந்தவூர் லகான் அணியை வீழ்த்தி பட்டியடிப்பிட்டி ஓசோன் அணி சம்பியனாக தெரிவு




**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) 2007 -2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியிலிருந்த கரப்பாந்தாட்ட அணி வீரர்களுக்கு பயிற்சியளித்து தேசிய மட்டம் வரை சென்று சாதனை பெறுவதற்கு வழியமைத்த கல்லூரியின் ஆசிரியரும், கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளருமான எஸ்.ஏ.சீ. எம். றமீன் அவர்களை கௌரவப்படுத்துமுகமாக, அம்மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட "றமீன் சேர் சம்பியன் கிண்ணம் 2022" இரவு நேர கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பட்டியடிப்பிட்டி ஓசோன் கரப்பந்தாட்ட அணி சம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இச்சுற்றுத்தொடரில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தலை சிறந்த 16 கழகங்கள் பங்குபற்றி இருந்தது.

இறுதிப்போட்டிக்கு தெரிவான ஓசோன் அணி, நிந்தவூர் லகான் கரப்பாந்தாட்ட அணியை 18:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணம் மற்றும் பணப்பரிசையும் பெற்றுக் கொண்டதோடு, இரண்டாம் இடத்தை பெற்ற லகான் அணிக்கு கிண்ணம் மற்றும் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இறுதிப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக ஆசிரியர் எஸ்.ஏ.சீ.எம். றமீன் அவர்களும், விசேட அதிதியாக கல்லூரியின் அதிபர் ஏ.பீ.முஜீன், ஓய்வு பெற்ற கல்லூரியின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் விளையாட்டு வீரர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## பங்களாதேஷிலிருந்து நாட்டுக்கு அழைக்கப்பட்ட கமில் மிஷார



பங்களாதே ஷ் அணிக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடருக்கான குழாத்திலிருந்து இலங்கை அணியின் இளம் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் கமில் மிஷார நீக்கப்பட்டுள்ளார்.

கமில் மிஷார முதல் டெஸ்ட் போட்டியில் அணியில் இணைக்கப்படவில்லை. தொடர்ந்து தற்போது நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலும் இணைக்கப்படவில்லை. எனினும் இலங்கை கிரிக்கெட் ஒப்பந்த விதிமுறையை (ஒழுக்கம் தொடர்பான குற்றச்சாட்டு) மீறியதாக கமில் மிஷார மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், அவர் உடனடியாக நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடனடியாக நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ள கமில் மிஷாரவிடம் இலங்கை கிரிக்கெட் சபை முழுமையான விசாரணையொன்றை நடத்தவுள்ளதுடன், விசாரணையின் பின்னர் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை டெஸ்ட் அணி, முதல் போட்டியை சமப்படுத்தியிருந்ததுடன், இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்சமயம் டாக்கா – மிர்பூர் மைதானத்தில் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 25ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.